# ஸ்ரீ லலிதாம்பாள் சோபனம்

மங்களமான லலிதாம்பாள் சோபனம்

மங்கள முண்டாகப் பாடுகிறோம்

ச்ருங்கார கணபதி ஷண்முகர் சரஸ்வதி

எங்கட்கு முன்வந்து காப்பாமே.

முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்திரனும்

மும்மூர்த்திகளும் வேதப் பிராமணர்களும்

நாற்பத்து முக்கோண நாயகியாளம்மன்

நாதர் காமேசருங் காப்பாமே 1.

ஆதிப்பிரம்மரிஷி அகஸ்தியரும்

அகில லோகம் சஞ்சரிப்பவரும்

ஜோதி காமாக்ஷியைக் காஞ்சி நகரத்தில்

ஸ்துதித்து பூஜை செய்து தபஸிருந்தார்.

சங்கு சக்கரம் வலக்கை புஸ்தகமும்

தரித்தே ஹயக்ரீவர் மஹா விஷ்ணுவாய்

தங்கவர்ணி லோபா முத்திரை மணவாளன்

தபஸிற்கு முன்வந்தார் (சோபனம் சோபனம்) 2.

எட்டிரண்டுபசார பூஜைகள் முதலாக

எல்லாவற்றையும் பக்தியுடனே செய்து

ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அந்த

அகஸ்தியர் வேதத்தால் ஸ்துதித்து நின்றார்

கும்ப முனியுட தபஸாலே மனம்

குளிர்ந்த ஹயக்ரீவருந் தானுரைப்பார்

இன்பமாக(ச்) செய்தாய் பூஜை யகஸ்தியா

என்ன வேண்டுமென்றார் (சோபனம் சோபனம்) 3.

துரக வதன ருட அம்ருத வசனங் கேட்டுச்

சொல்லுவர் மித்திர வருண புத்ரர்

அபய வரத கர அருமையாய் நான் கேட்கும்

வரந்தர வேணுந் தயவு செய்து

கலியுகந் தனிலிந்தப் பாமர ஜனங்கட்கு

கைவல்ய ஞானம் எப்படி யுண்டாகும்

எளிதாகவே ஒரு உபாயஞ் சொல்லுமென்று

இரந்து கேட்கலுற்றார் (சோபனம் சோபனம்) 4.

ஆதரவுடன் ஜனங்களுக் குபகாரமாய்

அகஸ்தியர் ஹயக்ரீவர் எடுத் துரைப்பார்

ஏதகஸ்தியரே இந்தப் ப்ரச்னந்தான் ஸ்யவனருக்கு

என்னாலே முன்னஞ் சொல்லப்பட்டது

ஆனாலும் நீர் கேட்டது சொல்லுவோமிப்போ

அன்புடன் கேளும் ஏக மனதாய்

இன்று முதல் உமக்காகும் உபதேசத்தால்

எல்லோரும் கேட்கட்டும் (சோபனம் சோபனம்) 5.

ஆதி பராசக்தி யனுக்க்ரஹத்தால்

ஆத்மக்க்யானம் வரும் மானிடர்க்கு

மாதவர் மாய்கை யில்லாதே விட்டாலிந்த

மானிடர்களுக்கு மயக்கமில்லை

ஹயக்ரீவர் சொற்கேட்டு அகஸ்தியர் பின்னும்

ஆதி பராசக்தி ரூபங்களை

தயவு செய்து எனக்குச்சொல்ல வேண்டுமென்று

தண்டனிட்டுக் கேட்டார் (சோபனம் சோபனம்) 6.

அந்த ஹயக்ரீவர் தம்முடைய மனதில்

அம்பிகை பாதத்தை நமஸ்கரித்து

அகஸ்தியர் கேட்பதெல்லாஞ் சொல்லுவோ மென்று

எழுந்தருளினார் அச்வமுகர்

அகஸ்தியரு மந்த ஹயக்ரீவரைத்தன்

ஆசிரமத்தில் கூட்டிக்கொண்டு வந்து

பகவானை ஆசனந் தன்னில் வைத்துப்பின்

பணிந்து கேட்கலுற்றார் (சோபனம் சோபனம்) 7.

"பகவானே! தர்ம சாஸ்  திரங்களெல்லாம்

பிறந்தது உம்மிடத்திலிருந்து

மஹாதேவியுடைய அவதாரங்களை

மாதவா விஸ்தரித்துச் சொல்லவேணும்"

அன்புடன் கேட்ட அகஸ்தியரை வாழ்த்தி

ஹயக்ரீவ மூர்த்தியும் எடுத்துரைப்பார்.

அம்பிகையுடைய அவதாரங்கள் சொல்ல

ஆரம்பித்தாரப்போ (சோபனம் சோபனம்) 8.

<u>மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமாகிய ஹயக்ரீவர் அகஸ்திய மஹரிஷிக்கு தேவி மஹாத்மியத்தைச் சொல்ல ஆரம்பித்தல்.</u>

ஆதியந்தம் பராசக்திக்கில்லை

ஆதார முஞ் ஜகத்துக்கிவள் தான்

ஜோதி ரூபியுடைய ரூபங்களை யெல்லாம்

சொல்ல முடியா தொருவராலே

ஆனாலும் தெரிந்தமட்டுக்கு மிப்போ

அவளுடைய சில அவதாரஞ் சொல்வோம்

முன்னே பிரம்மாவின் த்யானத்தில் ரக்ஷிக்க

முதல்வந்தாள் ஒரு ரூபம் (சோபனம் சோபனம்) 9.

முன்னாள் தேவேந்திரன் வெள்ளையானை ஏறி

மூன்று உலகம் சுற்றி வரும் போது

தன் நினைவில்லாமல் மதத்தினால் உமையவள்

சங்கரரையும் வணங்காமல் வந்தான்.

இந்திரன் மதத்தை யடக்க வேண்டுமென்று

ஏவினார் ஈசரும் துர்வாஸரை

வந்து துர்வாஸரும் இந்திரன் கையிலொரு

மாலையைக் கொடுத்தார் (சோபனம் சோபனம்) 10.

வாங்கி மாலையை இந்திரன் யானையினுடைய

மண்டையில் வைத்தான் மதத்தினாலே

ஓங்கித் துதிக்கையால் எடுத்தந்த மாலையை

உதறிப் பூமியில் காலால் மிதித்தது.

துர்வாஸ முனி கண்டு அதிகோபத்துடனே

துர்புத்தி இந்திரனைச் சாபமிட்டார்

உன்கர்வமல்லவோ இந்திரா இதுசெய்யச் சொல்லிற்று

சர்வேச்வரி போமென்றார் (சோபனம் சோபனம்) 11.

சபித்துவிட்டு முனி போகிய பின்பு

சக்ரேசன் அமரா  புரியில் வந்து

அபசகுனங்களை கண்டு பயந்து

ஆசாரியர் பிருஹஸ்பதியை வருந்தி

ஆசனத்தில் வைத்து நமஸ்கரித்து

அவரைப் பார்த்  திந்திரன் ஏதுரைப்பான்
தேசத்தில் துர்நிமித்தம் காணுகின்றதே
தேவரீர் வழி சொல்லும் (சோபனம் சோபனம்) 12.

தேவகுருவுங் கேட்டுச் சொல்வார் இந்திரனோடு
செய்த கர்மம் அனுபவித்தே தீரும்
பாபகர்மம் அனுபவித்தாற்றான் தீரும்
ப்ராயசித்தத்தினால் போவதில்லை
நிவர்த்தியினாலே ஒரு நாளும் போகாது
லக்ஷங்கோடி ஜன்மம் ஆனாலும்
ஒன்று கேள் பாபத்துக்கு நிவர்த்தி வாஸவனே
உண்மை நான் சொல்லுவேன் (சோபனம் சோபனம்) 13.

ஹத்தி திருட்டு ஹிம்சை பானம் பரதாரம்
அஞ்சும் பஞ்ச மஹாபாதகமாம்
அறியாத் தனத்தாலே ஐந்து பாபமும் செய்தால்
அந்தந்தச் சாதிபோல் நிவர்த்தியுண்டாம்
பிரஹ்மஹத்திக் கொரு சாஸ்திரத்திலுமில்லை
பிராயச்சித்தம் ஒரு நாளுமிந்திரா சொல்லுவேன்
திருட்டென்ற பாபத்திற்கோர் உபகதை
தேவேந்திரா கேள் (சோபனம் சோபனம்) 14.

களவுத் தொழிலெங்கும் செய்து கொண்டுவரும்

கள்ளனொருத்தன் காஞ்சிப் பட்டணத்தில்

களவாண்ட பணங்களைக் கனமாய்ச் சேர்த்து நடுக்

காட்டிற்கு கொணர்ந்து புதைத்து வைத்தான்.

கள்ளனுக்குள் கள்ளன் வேடனொருத்தன் அதைக்

கண்டு வனம் போனான் பின்னாலேயே

மெள்ள வந்தந்தப் பணங்களை யெல்லாம்

முற்றிலும் எடுத்தான் (சோபனம் சோபனம்) 15.

கொண்டுவந்தப் பணங்களையெல்லாம்

கொண்ட பெண்டாட்டி கையிற் கொடுத்தான்

பெண்டாட்டி வாங்கியுள்ளே வைத்துக்கொண்டு

புருஷனைப் பார்த்தொரு வாக்குரைப்பாள்

வால்மீகர் சாபத்தால் வேடர்க்குத் தனங்கள்

விருத்திக்க மாட்டாது அதனாலே

நன்மையாய் நான் சொன்ன தர்மஞ்செய்தால் வெகு

நாளிருக்கும் தனம் (சோபனம் சோபனம்) 16.

காரியமா மிந்தவார்த்தை கேட்டு வேடன்

கிராமம் தடாகந் தோப்பாலயங்கள்

பாரியாகச் செய்து பிராஹ்மணாளுக்கெல்லாம்

பக்தியுடன் தானஞ் செய்திருந்தான்

வேடன் வேடத்திக்கு காலங்கள் சென்றபின்

விஷ்ணு பிரம்மா சிவ யம தூதர்கள்

கூடி வந்தவர்களை அவரவர் லோகத்திற்குக்

கூட்டிப் போக வந்தார் (சோபனம் சோபனம்) 17.

நாரதர் வந்திந்த தூதர்களுக்குச் சொல்வார்;

நாலு மூன்றாண்டிவர்குக் காற்றுரூபம்

திருடின பணத்துடையவர்க்குத் தர்மமென்று

திருப்பினார் நாரதர் தூதர்களை

பணத்திற்குடையவர்க்குத் தெய்வ கிருபையாலே

பாபம் போய் புண்ணியம் சித்தித்தது

பணத்திற்குடையவர் நல்ல கதியடைந்தார்;

பார்த்துக்கொள் இந்திரா (சோபனம் சோபனம்) 18.

ஜனங்களை ரக்ஷிக்கும் ராஜன் மாத்திரந்தான்

செய்யலாகுந் துஷ்ட நிக்ரஹங்கள்

மனிதர்கள் பசுயக்ஞந் தவறு தலாய்ச் செய்தால்

மாதேவி கோபித்து எரித்திடுவாள்

யுவனாச்வ மகாராஜன் யக்ஞத்தில் தேவர்கள்

ஒருவர்க்கொருவர் முந்திச் சண்டையிட்டார்

தேவர்க்கு பாகத்தைப் பிரித்து கொடுத்தார்

தயவாக பிரஹ்மாவும் (சோபனம் சோபனம்) 19.

ஸூராபானம் செய்த பேர்க்கு நரகமுண்டு
சொட்டுக் கொரு வருஷக் கணக்காக
பரதார  கமனத்தால் ஆயுஸு குறைந்திடும்
பாபரோகம் நரகங்கள் உண்டு
பரதார  கமனத்தால் ராவணன் மாண்டான்
பாஞ்சாலியால் துரியோதனன் மாண்டான்
ஒருக்காலும் பரதார நினைவில்லாதவர்க்கு
ஒருநாளும் அமரில்லை (சோபனம் சோபனம்) 20.

பானம் பரதாரம் முன் சொன்ன மூன்றுடன்
பஞ்சமகாபாதகங்கள் ஐந்து
ஏனிதுகளை எல்லாம் உனக்கு சொன்னேன் என்றால்
இந்தப் பாபங்களெல்லாம் உனக்குமுண்டு
தீராத பாபங்கள் தீருந்தேவியுடைய
ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி ஜபத்தாலே
தீராத பாபத்தைச் செய்யாதே இந்திரா
சொல்லுவேன் உனக்கிப்போ (சோபனம் சோபனம்) 21.

முன்னாலே தேவரும் நீயும் தாதா புத்திரன்
விசுவரூபனை புரோஹிதராய்ச்
சொன்னபடிக்கு இருந்தான் உங்களுக்கு

துரோஹமுஞ் செய்யவில்லை விச்வரூபன்

அநியாயமா யவனை நீ வதைத்தாய்

அஸுரர் மருமான் என்ற விரோதத்தால்

விச்வரூபனுடைய வதத்தால் பிரம்மஹத்தி

விரட்டித்துன்னை இந்திரா (சோபனம் சோபனம்) 22.

விஷ்ணு அறிந்தந்த பிரம்மஹத்தியை

இஷ்டமாய் உன் மீதிரக்கத்துடன்

பக்ஷமாய் நாலு பங்காக்கி பிரம்மஹத்தியை,

பூமி பெண்கள் மரங்கள் நதிகளுக்கும்

ஏற்றுக் கொள்ளச் சொல்லிக் கொடுத்து அவர்களால்

கேட்ட வரங்கள் கொடுத்தனுப்பி வைத்தார்

விச்வரூபன் தகப்பன் அக்னியில் வந்த

விருத்திரனைக் கொன்று ஹத்திபட்டாய் (சோபனம் சோபனம்) 23.

அதுவும் போதாதபடிக்குத் துர்வாஸரும்

இந்திரா உன்னை வேணது சபித்தார்

இது எல்லாம் ஒருமிக்கப் பலனனுபவிப்பாய்

இக்ஷணம் நிமித்தங்கண்டு சொல்லுகிறேன்

சோபையில்லை பார் உன்னுலகத்தில் இந்திரா!

சோறில்லாதவர்கள் போல் ஆனார் தேவாள்

லோபிகள் ஆனார்கள் உலகத்து விப்பிரர்கள்

ரொம்ப உற்பாதங் கண்டேன் (சோபனம் சோபனம்) 24.

இப்படி இந்திரனுக்குக் குருவுங் கதைகளை
எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் போது
மார்புத் தட்டிக் கொண்டு அஸுராளுடனே
மலகனென்ற அஸுரராஜனும்
அமரா  பதியை வளைத்துத் தேவர்களை
அடித்து வெளியிலே துரத்தி விட்டான்
அமராளும் இந்திரனும் பிரம்மாவிடத்தில் போய்
அஸுரன் சேதியைச் சொன்னார் (சோபனம் சோபனம்) 25.

சதுர்முகர் கேட்டிந்த அஸுரர் சேதியெல்லாம்
தட்டுக்கெட்ட இந்திரனைப் பார்த் துரைப்பார்
இதற்கொன்றும் நம்மாலே ஆகாது இந்திரா
என்னாலே யாகும் உபாயஞ் சொல்வேன்
அச்சுதரே ஜயம் தருவா  ருங்களுக்கு
அவரிடம் போங்கள் என்றாருடனே
சச்சிதானந்தர் சமீபத்தில் அத்தனை
பேர்களும் வந்தார்கள் (சோபனம் சோபனம்) 26.

சேஷசயனருட சரணாம்புஜங்களைத்
தண்ட  னிட்டு ஸ்தோத்திரங்கள் செய்து

காயாம்பு வர்ணரோடு தாங்கள் படுகின்ற

கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டார்கள்.

நாதரே உம்முட தாஸர்களேயான

நாங்கள் படுகின்ற சங்கடங்கள்

ஏதறியாம லிருக்கின் காரியம்

இந்த நித்திரையுண்டோ (சோபனம் சோபனம்) 27.

மலகன் முதலான அஸுரனை வதைத்து

மாதவா இந்திரனை நிலையிலாக்கும்!

அலைகிறோமே நாங்கள் வேஷத்தை மறைத்து

அந்தக் குறைவு உமக்கில்லையோ !

கருட வாஹனரும் அவர்களைப் பார்த்துக்

கம்பீரமாய் ஒரு வார்த்தை சொல்வார் ;

ஒருக்காலும் உங்களுக்கு மரணமில்லாத ஓர்

உபாயத்தைச் சொல்லுவேன் (சோபனம் சோபனம்) 28.

அங்கே போய்ச் சொல்லுங்கள் அஸுராளுடனே

அம்ருத பானஞ் செய்தோமானாக்கால்

உங்கட்கும் எங்கட்கும் சாவில்லை ஒருக்காலும்

எல்லோருமா யம்ருதங் கடைவோம்

இப்படிச் சொல்லிய அஸுரனை எல்லாம்

இங்கே கூட்டிக்கொண்டு வாருங்கள்

அப்போ அஸூரருக்கு வேலை மாத்திரம் மிஞ்சும்

அம்ருதம் உங்களுக்குத்தான் (சோபனம் சோபனம்) 29.

பாற்கடலில் நான்கு ஔஷதிகளையும்

பறித்துக் கொண்டு வந்து போடுங்கள்

நிற்காமல் போய் மந்தரத்தை மத்தாகவும்

நீண்ட வாஸூகியைக் கயிராகவும்

வைத்துக் கொண்டு கடலைக் கடைந்தீரானால்

வருமதிலேயிருந்து அம்ருதக் குடம்

நிச்சயமாய் உங்களுக்குத்தான் அம்ருதம்

நீங்களே புஜிப்பீர்கள் (சோபனம் சோபனம்) 30.

<u>தேவர்களும் அஸூரர்களும் கூடி அம்ருதங்கடைதல்</u>

சாரங்கருடைய சம்மதத்தை எல்லாம்

சகல தேவாளும் அஸுராளுடன்

ஆங்காரமில்லாமற் போய்ச் சொன்னவுடனே

அந்த தானவர் கேட்டு உள்ளதென்றே

க்ஷீராப்தி கரையிலே கூடி வந்தார்கள்

சீக்கிரமே நான்கு ஔ ஷதிகளையும்

சேர்த்துக் கொண்டு அந்த தேவாளும் அஸுரர்களும்

க்ஷீராப்தியில் போட்டார் (சோபனம் சோபனம்) 31.

மந்தரகிரியை மத்தாகவே கொண்டு

வாஸூகியைக் கயிறாகக் கொண்டு

தந்தியாய் வாஸூகியை மூன்று சுற்றாக்கித்

தலைப்  புறத்தை அஸூ  ராளிழுத்தாள்

வாசுதேவருட ஆக்னையைால் தேவர்கள்

வால்புறத்தைப் பிடித்  திழுத்தார்கள்

ஈசரும் பிரம்ம  ரிஷிகள் கந்தர்வாளும்

இது பார்க்க வந்தார்கள் (சோபனம் சோபனம்) 32.

மந்த்ரகிரி அமிழ்ந்து போவதைக் கண்டு

மாதவரும் பார்த்தச் சங்கையுடன்

கீழே கூர்மமாகத் தாங்கி முதுகினில்

மேலே சங்கு சக்ரபாணியாகி

கூடித் தேவாளுடன் அம்ருதங்கடைந்து

கொடிய அஸூராளை மயக்கிவிட்டு

வாடுந்தேவர்கட்கு அம்ருதங் கொடுத்து

மனதிலே நிச்சயித்தார் (சோபனம் சோபனம்) 33.

இழுக்கின்ற வேதனை பொறுக்காமல் வாஸூகி

எரிக்கும் விஷத்தை யப்போ கக்கியது

மழுப்போ யெல்லாரையும் எரிக்கத் தொடங்கிற்று

மதனத்தை விட்டோடத் துவங்கினார்கள்;

பக்தாளுக்காபத்தை தீர்க்க வேண்டுமென்று

பரமேசரும் விஷத்தை விழுங்கி விட்டார்.

ஸ்தோத்தரித்துப் பரமேசரைப் பின்னும்

துவக்கினார் மதனத்தை (சோபனம் சோபனம்) 34.

பாரிஜாதங் காமதேனுவும் ரத்னமும்

பிறந்து தேவேந்திர  னிடம் சேர்ந்தது

நாரியரும் வந்தாள் பாலசந்திரனும் வந்தான்

இந்திரனும் ஈசரும் அடைந்தார்கள்

பின்னும் அநேகம் ரத்னங்களும் வந்திடப்

பிறகு அம்ருத கலசங் கொண்டு

தன்வந்தரி வந்தார் லக்ஷ்மி தேவி வந்தாள்

ஸ்வாமி விஷ்ணுவைச் சேர்ந்தாள் (சோபனம் சோபனம்) 35.

<u>மோஹினி அவதாரமாகி அஸுரர்களை மயக்கி அம்ருதத்தைப் பங்கிடல் ..</u>

<u>ஹரிஹர புத்திரர் உற்பத்தி</u>

வஞ்சக அஸுராள் அம்ருத கலசத்தை

வந்து பறித்துக் கொண்டு ஓடினார்கள்

என்ன செய்வோமென்று தேவரும், போய்ப்பிடிக்க

இவர்கட்கும் அவர்கட்கும் சண்டையாக

லோகேசர் ஹரியிந்தச் சண்டையைக் கண்டு

(லோக) மாயையை த்யானித்தார் ஒரு முஹூர்த்தம்

மோஹினி வேஷந் தரித்து அஸுரர்களை

மோஹிப்பித்தா  ளம்மன் (சோபனம் சோபனம்) 36.

சண்டை பிடிக்கின்றவர் நடுவிலே மோஹினி

சந்தோஷமாய் மெள்ள நின்று வராள்

தண்டை கொலுசு பாதஸரம் பீலி காலாழி

தரித்தாள் நவரத்தினத்தால் பாதங்களில்

இழை சேர்த்த பட்டுடன் மேகலாபரணமும்

இடையில் ரத்னக்கச்சை புறத்தில் கட்டி

இணையில்லா ரவிக்கையுடன் மார்பில் முத்துவடம்

இலங்கும் கைவளையுடன் (சோபனம் சோபனம்) 37.

மாதளம் பட்டுப்போல் உதடுங் கனிவாயும்

மதனன் வில்லைப்போல் புருவங்களும்

காதுக் குண்டலத்துடன் மூக்கு நத்துஞ் ஜொலிக்க

கருங்குழலால் பின்னல் கட்டி மின்ன

தரித்து வருகின்ற மோஹினியைக் கண்டு

தானவாள் சண்டையை நிறுத்தி விட்டு

ஆரிவள் என்று சுற்றி வந்தவ் வஸுராள்

அம்ருதத்தை மறந்தார்கள் (சோபனம் சோபனம்) 38.

அப்போ மோஹினி சொல்வாள் அஸூரர்களுடனே
ஐயன்மார்களே கேளும் சண்டையானால்
இப்போ தென்கையில் தந்தாலம்ருதத்தை
எல்லாத் தேவருக்கும் கொடுத்துக் கொஞ்சம்
கலசம் உங்கள் முன்னே தான் வரும் நிச்சயம்
காரியமென் றுங்கட்குத் தோன்றினால்
மலைக்காமல் தாருங்கள் அம்ருதங்கலசமென்று
மாய்கை மோஹிப்பித்தாள் (சோபனம் சோபனம்) 39.

மூட அஸூராளும் அம்ருதத்தைக் கொடுத்துப் பின்
மோஹித்து வரிசையாய் இருந்தார்கள்
உடனே தேவரும் ஒரு வரிசையாய் இருந்தார்கள்;
ஒகோ தேவர்க்கம்ருதம் பொழியுகிறாள்
சொர்ணக் கரண்டியால் பரிமாறும் போது
சோபிக்கும் வளை பாதஸரங்குலுங்க
சொர்ணம் போல் மோஹினியைக் கண்டு அஸூராள்
சும்மாயிருந்தார்கள் (சோபனம் சோபனம்) 40.

பொட்டென அவ்வளவும் தேவர்கட்கு
பொழிந்து கொண்டொடுக்கத்தில் வரும்போது
ஒட்ட எடுக்கும்போது அகப்பையினுடைய
ஓசை குடத்திற்குள் கேட்கின்றது

மடையர் அஸுராளுக்கு அதுகூடத் தெரிய(வி)ல்லை

மாய்கையை அறிந்தார் ராஹு, கேதுவும்

நடுவில் ஒளிந்து சந்திர சூரியாளுடனே

ராஹுவுங் குடித்தான் (சோபனம் சோபனம்) 41.

சந்திராதித்தன் முதல் தேவாளுக்கெல்லாம்

சம்பிரமாய் அம்ருதம் பொழிந்தாள்

சந்திரபாஸ்கரன் சொல்லிக் கொடுக்கவே அகப்பையால்

தலையை அரிந்தாள் ராஹுவை மோஹினி

ராஹுவின் தலையிரண்டா யாகக்சக்தி போச்சு

ராஜ நாயகி கலசத்தை அஸுராள் முன்னே

வைத்துவிட்டு மோஹினி அந்தர்த்தானமானாள்

விழிக்கிறார் அஸுரர்கள் (சோபனம் சோபனம்) 42.

காணாதே மோஹினி தேவியையும் வெறுங்

கலசத்தையும் கண்டார் அஸுராளெல்லாம்

துணிந்துவிடுவோமென்று அமராளுடனே

தொடுத்தார் யுத்தத்தைப் பின்னுமவர்

கதையுட பலத்தாலே தேவர்கள் அஸுராளைத்

துரத்தினர் அடித்துப் பாதாளத்திலே;

ஸ்துதித்துக் கொண்டு விஷ்ணுவை ஸ்வர்க்க லோகத்தில்

ஸுகமாக இருந்தார்கள் (சோபனம் சோபனம்) 43.

இந்த விருந்தாந்தத்தை நாரத  ரோடிப்போய்
ஈசரிடத்தில் சொல்லி அறிக்கையிட்டார்
அந்தக்ஷணம் சிவன் க்ஷீராப்திக்கரை தன்னில்
வந்து விஷ்ணுவுடன் வாக்குரைப்பர்
லோகமாய்கையால் ஒருரூபம் எடுத்தீராம்
ஒரு தரம் எனக்கதை காட்டுமென்றார்
ஆகட்டுமென்று விஷ்ணுவுஞ் சிவனை விட்டு
அந்தர்த்தான  மானார் (சோபனம் சோபனம்) 44.

உமையின் பதியங்கே சுற்றிப்பார்க்கும் போது
உத்தியான  வனங்கண்டார் அவ்விடத்தில்
அதிரூபமான மோஹமாம் பெண்கொடி
அழகாகப் பந்தாடிக்  கொண்டிருந்தாள்!
கண்டவுடன் சிவன் உமையைவிட் டோடிப்போய்
கட்டிப்பிடித்து ஆலிங்கனமுஞ் செய்தார்
உண்டானார் ஹரிஹரபுத்திரர் உடனே
உயர்விந்து மர்த்தன (சோபனம் சோபனம்) 45.

மோஹினியும் அந்தர்த்  தான மடைந்தாள்
மோஹந்தெளிந்து சிவ  னுமையுடனே
வாஹனமான ரிஷபத்தி லேறியே

வந்து கைலாஸத்தில் வஸித்திருந்தார்.

முன்னே பிரும்மாவை ரக்ஷிக்க வந்தானே

முதலாவது அந்த அவதாரம்

பின்னே இப்பொழுது சொன்னோம் மோஹினிரூபம்

பின்னுங்கேள் இது(வி)ரண்டு (சோபனம் சோபனம்) 46.

லலிதாதேவியுடைய மஹிமை தன்னிலே

லக்ஷங்கோடியுள்ளதில் லேசஞ் சொல்வோம்,

கேளும் பக்தியுடன் கேட்டவர்க்கு மங்களம்

கிட்டும் நிச்சயம் ஸந்தேஹமில்லை

பூர்வத்தில் தக்ஷனுடைய கன்னிகையாக்கும்

பூர்வாவதாரம் பரமேஸ்வரிக்கு

சாம்பவர் சொல் தள்ளி தகப்பனார் யக்ஞத்துக்குத்

தாக்ஷாயணி போனாள் (சோபனம் சோபனம்) 47.

தகப்பனுந்தாயும் அம் மா வந்தாயாவென்று

சொல்லவில்லை தேவி பொறுத்திருந்தாள்

முப்புர மெரித்தவருடைய பாகத்தையும்

முடக்கி விட்டெக்ஞத்தைச் செய்தான் தக்ஷன்!

ஈசர் பாகத்தை முடக்கினதால் தேவி

இவன் பெண் என்பதை மாற்ற வேணுமென்று

விசையாய் அக்கினியிலே மறைந்து பார்வதியாக

வேறே அவதரித்தாள் (சோபனம் சோபனம்) 48.

இதைக்கேட்டு ஈசனும் தக்ஷன் தலையைக்கிள்ளி
எரித்துவிட்டெக்ஞும் நிறைவேற்றிவிட்டு
வந்து இமயகிரி தடத்தில் கங்கைமுன்னே
வடமூலத்தே யோக தபசிருந்தார்
பர்வதராஜரும் நாரதர் சொல்லாலே
பார்வதி ருத்ராணி என்றறிந்து
பார்வதி தேவியைத் தகப்பனார் ஈசர்க்குப்
பணிவிடை செய்வித்தார் (சோபனம் சோபனம்) 49.

ஸ்வாமி இப்படியாகத் தவஞ்செய்யும் போது
தாருகாஸுரன் சூரன் உண்டானான்
ஸ்வாமியின் பிள்ளையல்லாமல் ஒருவராலும்
சாவில்லை இவர்கட்கு வரத்தினாலே
தாருகாஸுரனடி பொறுக்காமல் தேவர்கள்
ஸ்வாமி முன் மன்மதனை ஏவினர்
வாராய் மன்மதனே தேவியோடீசரை
வாழும்படிக்குச்செய்வாய் (சோபனம் சோபனம்) 50.

தேவாள் சொன்னபடி மன்மதன் பாணத்தால்
தேவ தேவரைத் தொடுத்தடித்தான்

தேவர் கோபத்தினால் பார்த்து மன்மதனைத்
தஹித்துச்சாம்பலாக்கினார் மூன்றாங்கண்ணால்
பயந்து பார்வதியம்மன் அதைக் கண்டு ஓடிப்போய்ப்
பர்வதராஜன் சொல்லால் தபஸிருந்தாள்
மன்மதன் சாம்பலைப் பிசைந்து விஸ்வகர்மா
மனித உருவஞ் செய்தான் (சோபனம் சோபனம்) 51.

<u>பண்டாஸூரன் உற்பத்தியாகுதல்</u>

சாம்பமூர்த்தியப்போ அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் பொம்மையைப் பார்த்தார்; பார்த்தவுடன்
சாம்பசிவனுடைய அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் புருஷன் ஜீவனோடெழுந்தான்
விஷ்வகர்மா அந்தக்குழந்தையைக் கொண்டுபோய்
விருப்பத்துடனே வளர்த்த பின்பு
வேண்டிய வரங்களை அடையும் பொருட்டவன்
ஈசனைப் பூஜித்தான் (சோபனம் சோபனம்) 52.

அறுபதினாயிரம் வருஷம் சாம்ராஜ்யமும்
அவனுக்குக் கொடுத்தார் பரமேஸ்வரர்
மற்றுமொருவர் அவனை ஜயிக்காமல்
வரத்தையும் கொடுத்து அனுப்பிவைத்தார்
அவர் கோப அக்னியில் உண்டானதா லிவன்

அஸுரன் ஆகினான்; இதைக் கண்டு பிரும்மா

அமர சத்துருவானான் பண்டு போல என்றார்;

ஆகையால் பேர் பண்டன் (சோபனம் சோபனம்) 53.

பண்டாஸுரனிப்படி உண்டானவுடனே

பாதாளத்தில் போன அஸுராள் கேட்டு

கண்டக அஸுராள் பண்டாஸுரனை உடனே

கற்பித்தாள் பட்டணம் உண்டாக்கவே

மயனை வருத்திப் பண்டாஸுரன் உடனே

மஹேந்திரபுரிக்குத் தெற்குப் பக்கத்தில்

செய்யச்சொன்னான் சோணித புரத்தை, மயனும்

செய்தானதை; நன்றாய் (சோபனம் சோபனம்) 54.

<u>பண்டாஸுரன் அரசாட்சி</u>

சுக்கிரபகவான் கொணர்ந்து கொடுத்தார் கிரீடம்

ஸிம்மாஸனம் வெண்சாமரங்குடையும்

சுக்கிரன்போல் யோசனையுள்ள தம்பியான

விசுக்கிரனை வலது தோளில் சிருஷ்டித்தான்;

இடது தோளில் தம்பி விஷங்கனை சிருஷ்டித்தான்;

இன்னுமொருத்தி தங்கை திமினி என்பாள்;

வடிவுள்ள நான்கு பெண்டாட்டி யுண்டவனுக்கு

வாதாபிமர்த்தனா (சோபனம் சோபனம்) 55.

அஷ்டமந்திரிமார்கள் மந்தராலோசனை சொல்ல

அவர்களைக் கொண்டு ராஜ்யம் நடத்துகிறான்

துஷ்ட அஸுராளின் துர்புத்தி கேட்காமல்

சுக்கிரசாரி நித்தம் புத்திசொல்வார்

அதிதிபூஜை ஹோமம் சிவபூஜை நேமங்கள்

அஸுராளும் செய்கின்றீர் சுக்கிரன் சொல்லால்

மதியும் தர்மமாச்சு பண்டாஸுரனுக்கு

வாழ்வு வந்தபொழுது (சோபனம் சோபனம்) 56.

பண்டாஸுரனுக்குப் பலநாளைக்குப் பின்பு

கெட்டபுத்திவந்து தேவர்களைப்

பிடிக்கத் துவங்கினான்; வாஸவன் முதலாகப்

பிடித்துக்கொண்டு வந்து தன் கோட்டையில்

காவல் காக்கச்சொல்லிச் சேவகராகவே

கட்டளையிட்டான் தேவர்களை;

துஷ்டன் கையிலகப்பட்டு விழிக்கிறார்கள்

வில்வலாந்தகனே கேள் (சோபனம் சோபனம்) 57.

தங்கட்கு வினையைத் தேவாள் வருத்திக் கொண்டார்

தாருகாஸுரனை வதைக்கவென்றே

சங்கரரிடத்தில் மன்மதனை ஏவப்போய்த்

தானே வலையில் விழும்புலியைப் போல,

ஸ்வாமி தபஸிற்குத் துரோகம் நினைத்ததால்

சத்துருவாகினான் பண்டாஸுரன்

வம்பன் பண்டாஸுரனை வதைப்பதற்கு

மனதில் நிச்சயித்தார்கள் (சோபனம் சோபனம்) 58.

நிச்சலர் படுகிற சங்கட மறிந்து

சத்துரு ஸம்ஹார மஹாவிஷ்ணுவும்

அச்சுதரும் மாயா சக்தியை வருத்தி

அஸுரர்கள் மோஹிக்கும் ரூபமதாய்ச்

சொல்வர் மஹாவிஷ்ணு; "தோழிமாயை நீயும்

துஷ்டன் பண்டாஸுரன் தர்மங்களை

ஒன்றையும் அவர்கள் செய்யாமல் மோஹிப்பித்து

உபத்திரவி போ" என்றார் (சோபனம் சோபனம்) 59.

உத்தரவாலே மாயையும் தனக்கு

ஒப்பான எட்டுத் தோழிமாருடன்

உத்தியான வனத்திலே பண்டாஸுரன் நித்தியம்

உதயத்தில் குளிக்குங் குளக்கரையில்

பச்சைக்கல்லிழைத்த படிக்கட்டின்மேலே

பாடுகிறாள் மாயை வீணையுடன்

பிச்சிக்கொடி மேலே குயில் கூவினாற்போல

பெண்கொடி பாடுகிறாள் (சோபனம் சோபனம்) 60.

நித்தியம் வருவது போல் மந்திரிமாருடன்

நீராடவந்தான் பண்டாஸுரனும்

சித்திராங்கியான மங்கையைக் கண்டான்

தேன்மொழியாளுட பாட்டுங்கேட்டான்

மாய்கையை அடைந்தான் பண்டாஸுரனும்

மந்திரிமார் எட்டுப் பெண்களைச்சேர்ந்தார்

மாய்கையுடன் அவன் மஞ்சத்தில் இருந்தான்

வாழ்வு தேவர்க்காச்சு (சோபனம் சோபனம்) 61.

மாய்கையாகிய மடுவில் விழுந்தான்

மறந்தான் பண்டாஸுரன் சிவபூஜையை

வருஷங்கள் அறுபதினாயிரமும் பண்டை

வரமுங் கழிந்தது நிமிஷம் போலே

குடிலாக்ஷன் முதலான மந்திரிமார்களும்

கூடினார் இவன் போல் மாய்கைகளை

அடித்துப் பறித்தாலும் ஆரோடிப்போனாலும்

அவனுக்குத் தெரியாது (சோபனம் சோபனம்) 62.

அந்த ஸமயத்தில் நாரதரோடிப் போய்

அமராளுக்கு நல்ல புத்தி சொல்வர்

அஸுரன் மந்தபுத்தி கண்டிந்த வேளையில்
(மஹா) தேவியை ஆராதனை செய்யுங்கள்
தேவி வந்தால் உங்கள் சங்கடங்கள் தீரும்
செய்யுங்கள் தபஸைத் தாமஸியாமல்
இப்படித் தேவர்க்கு புத்திசொல்லிவிட்டு
ஏகினார் நாரதர் (சோபனம் சோபனம்) 63.

<u>தேவர்கள் அம்பிகையை ஜபத்தால் த்யானித்து ஹோமஞ் செய்தல்</u>

தேவமுனிசொல்ல இந்திரனுடன் கூடச்
செய்கிறார் தேவர்கள் உக்கிரதபஸை
ஈஸ்வரியை நோக்கி வருஷம் பதினாயிரம்
இப்படித் தேவர்கள் தபஞ் செய்தார்கள்
ஆஹார நித்திரை விட்டெல்லாத் தேவர்களும்
அதி கடினமான தபஸிருந்தார்
பகவதி ஈஸ்வரியாள் இதுவரைக்கும்
பிரத்யக்ஷமாகவில்லை (சோபனம் சோபனம்) 64.

அஸுரகுருவும் தேவர் தபஸைக் கண்டு
அவருடமுதல் கொள்ளை போனதுபோல்
விசையாய் வந்து பண்டாஸுரனிடம் சொல்லி
விக்கினஞ் செய்யச்சொன்னான் தேவர்கட்கு
சேதியைக் கேட்டவுடன் மாய்கையை விட்டு

சிம்மாசனத்தில் வந்து யோசித்தான்
வதஞ்செய்கிறோமென்று சேனையுடனே வந்தான்
வானவர் தங்களிடம் (சோபனம் சோபனம்) 65.

வந்திங்கே பார்க்கும் பொழுது தேவரைச்சுற்றி
மாய்கையாலே ஒரு கோட்டை கண்டான்
தந்திரஞ் செய்தான் கோட்டையைப் பேர்த்திடச்
சரிப்படாமலே யவன் ஓடிப்போனான்
கோட்டையைக்கண்டு பயந்திங்கே தேவாள்
கொடூரன் பண்டாஸுரன் போட்டதென்றே
சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தம்மனைச்
சரணமானார் தேவர் (சோபனம் சோபனம்) 66.

பின்னுமந்தத் தேவர் எல்லோருமாய்க் கூடி
புத்தியால் ஒன்று நிச்சயித்தார்கள்
ஒன்று செய்வோம் தேவி ஜகத்தில் உண்டானால்
ஓடிவந்து நம்மை இரக்ஷிக்கட்டும்
இல்லையாகில் நாம் இவரவர் தேகத்தைக்
கணுக்கணுவாய்ச்சேதித்து ஹோமஞ்செய்வோம்
நல்லக்கினி குண்டத்தில் உடம்புகளைத் தேவாள்
நறுக்கி ஹோமஞ்செய்தார் (சோபனம் சோபனம்) 67.

<u>லலிதாம்பிகையின் அவதாரம்</u>

கால்முதல் தோள்வரை ஹோமஞ்செய்து தேவாள்

கழுத்துடன் குதிக்க நிச்சயித்தார்கள் !

மின்னல்மலை போல அக்னி குண்டத்தில்

மின்னிக்கொண்டொரு காந்தியுண்டாயிற்று

ஆச்சரியத் துடன் தேவாள் தேஜஸைக் கண்டார்

அதற்குள்ளே ஸ்ரீசக்ரரதத்தைக் கண்டார்

அழகான ஸ்ரீசக்ர ரதத்தின் மேல் லலிதா

அம்மனவ தரித்தாள் (சோபனம் சோபனம்) 68.

வானுலகத்துத் தேவாள் தாபத்தைத் தீர்த்திட

வந்து லலிதை அவதாரமாய்

பட்டுக்குடை கவியச்சித்திர பொன்ரதம்

பளிச் ப்பளிச்சென்று ஒளி திகழ

ஸ்ரீசக்ர ராஜ ரதத்தினில் தேவியும்

சிங்கார ரூபமாய்க் காந்தி மின்ன

ஆலவட்டம் வெண்சாமரம் போடச்சகிகளும்

அக்கினி குண்டத்தின் நடுவில் வந்தாள் (சோபனம் சோபனம்) 69.

பத்மராகத்தினால் இருபாதங்களிலும்

பாதஸரம் பீலி கொலுசுகளும்

ஹம்ஸம்போலே அம்மன் நடையழகும் நல்ல

யானைத்துதிக்கைபோல் துடையழகும்

சிவந்த பிதாம்பரம் உடுத்தபின் தட்டும்

சிறுத்த இடையில் இரத்தின மேகலையும்

நவநீதம் போன்ற தொப்புள் சின்ன உதரத்தில்

அழகாய் மும்மடிப்புடன் (சோபனம் சோபனம்) 70.

தாமரை மொட்டுபோல் தளதளென்று இரு

ஸ்தனங்களும் சரப்பளி முத்துஸரம்

கமுகு சங்கு போலக் கழுத்தும் jaவந்திவகை

கட்டிய மாலைகளும் நான்கு கையும்

நவரத்தினமிழைத்திட்ட வளையுங் கொலுஸுடன்

நாலுகையில் கணையாழி மின்ன

நவக்கயிறும் கரும்பும் துரட்டியும் புஷ்பமும்

நான்கு கையிலுமுண்டு (சோபனம் சோபனம்) 71.

பவளம் போல் உதடும் குருக்கத்தி மொட்டுப்போல்

பல்லுகளின் ஒளிக் காந்திகளும்

கருநீலப் புஷ்பம்போல் விழியும் தாழம்பூப்போல்

காதுகளும் விற்போல் புருவங்களும்

அழகு சம்பக மொட்டுப்போல் மூக்கு நத்தும்

புல்லாக்கும் கண்ணாடி போல் கன்னங்களும்

இருகாதில் ஓலை குண்டலம் வாளி முதலாய்

இலங்கும் சந்திரமுருகும் (சோபனம் சோபனம்) 72.

அர்த்தசந்திராகார நெற்றியில் சிந்தூரம்
அதி சிவப்பாம் மூன்றாங் கண்ணதுபோல்
அர்த்தசந்திரகலையும் சுட்டி ராக்கோடியும்
அழகு நீளமான கேசத்தின் மேல்
சிந்தாமணி ரத்தினத்தாலே கிரீடம்
சிரஸிலே தரித்துக் கொண்டிருக்காளம்மன்
சந்தனம் கஸ்தூரி புனுகு பூமாலையும்
தரித்து மாதா வந்தாள் (சோபனம் சோபனம்) 73.

மண்டல பால அரக்கன் போலம்மன் வர்ணமும்
வளமுள்ள சந்திரகாந்தி சீதளமும்
கண்டவுடன் தேவியைக் கைகூப்பித் தேவர்கள்
கனகத்தடி போல் விழுந்து பணிந்தார்கள் !
தேவர்களுடைய தேஹ ரணத்தைக்கண்டு
ஸ்ரீலலிதை மெத்த இரக்கத்துடன்
அவ்வளவு பேரையும் அம்ருதக்கண்ணால் பார்த்து
அங்கக்குறைகள் தீர்த்தாள் (சோபனம் சோபனம்) 74.

திடமான தேஹத்தை அடைந்தார்கள் தேவர்கள்
தேவியுடைய கிருபை அனுக்கிரஹத்தால்

அடிக்கடி நமஸ்கரித்து விட்டுக்  கீர்வாணர்

அஞ்சலி பண்ணி ஸ்துதி செய்கிறார்

ஓம் நமோ நாராயணியே பகவதி

உம்மை ஸ்துதி செய்கின்றோம் அதிதி  புத்திராள்

இன்றுபோல் எங்களுடைய ஆபத்தெல்லாந் தீர்த்து

என்றும் எங்களை ரக்ஷி (சோபனம் சோபனம்) 75.

மூன்றுலகங்களையும் நான்கு வேதங்களையும்

முழுவதையும் பெற்ற மாதா நீரே

வானுலகமும் ஸர்வ ராஜ்யாதிகாரமும்

வரமும் ஸாம்ராஜ்யாதிகாரமும் கொடுப்பது  நீர்

ஏழுவகை பேதத்தின் எண்பத்திநான்கையும்

இரக்ஷிக்கும் தாயாரும் நீரேயம்மா

சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தோம் உமது

சரணாம்புஜங்களில் (சோபனம் சோபனம்) 76.

அதலவிதல ரஸாதல சுவர்க்கங்களிலும்

அம்பிகையின் தேக ஒளிகள் வீச

சுதையும் சுதாவுடன் அளகேசன் அக்கினி

சுரர் கருடர் கின்னர் சித்தர்களும்

ஹரிபிரம்ம ஈ:சருடன் எல்லாம் உனது ரூபம்

யாராலே ஸ்தோத்திரம் செய்து முற்றும்

லேசம் சொன்னோம் மஹிமை லக்ஷங்கோடியுள்ளதில்

லலிதைக்கு நமஸ்காரம் (சோபனம் சோபனம்) 77.

<u>லலிதாம்பாள் தேவர்களுக்கு அபயம் அளித்தல்</u>

ஸ்துதியாலே மெத்த மனங் குளிர்ந்தீஸ்வரி

சொல்லுவாள் திரும்பவும் கீர்வாணர்க்கு

இன்று முதல் பயத்தைத் தூரவிட்டு விடுங்கள்

இந்தப் பண்டாஸூரன் நமக்கு பஞ்சு

அரை நிமிஷத்தில் பண்டாஸூரப் புழுவை

அக்கினி எரித்தாற்போல் வதைத்திடுவோம்

ஒருவாக்கிற்கு மறுசொல்லில்லை நமக்கு

உங்கட்கே மங்களம் (சோபனம் சோபனம்) 78.

<u>லலிதாம்பாள் கல்யாணம்</u>

அம்மனும் அவதாரமானதை யறிந்து

அப்போது பிரம்மா விஷ்ணு ருத்ரன் வந்தார்

மும்மூர்த்திகளுடன் முனிவர்கள் கந்தர்வர்

கின்னரர் கிம்புருடர் அப்ஸரஸூம்

வைரவர் ஷேத்ரபாலர் கந்தன் கணபதி

எட்டுதிக்குப் பாலரும் சக்திகளும்

வாராஹி சாமுண்டி மாதங்கி முதலேழு

மாதாக்களும் வந்தார் (சோபனம் சோபனம்) 79.

சகலரும் வந்து லலிதா தேவியுடைய

சன்னதி நிரம்பி இருந்தார்கள்

மஹாதேவியை நமஸ்காரம் செய்துவிட்டு

வாழ்த்தி ஸ்துதித்துக் கொண்டிருந்தார்கள்

நான்முகன் ஆக்ளையால் தேவிக்கு மண்டபம்

நல்ல சிற்பி விஸ்வகர்மாவினால்

ராஜேஸ்வரிக்கும் இசைந்தாப் போலவே கிரஹம்

நிர்மாணஞ் செய்துவைத்தார் (சோபனம் சோபனம்) 80.

அம்மன் கிருபையாலே விஷ்வகர்மாவும்

அழகான புரங்களும் சபைகளுடன்

சிந்தாமணி ரத்னம் பளபளவென்று மின்ன

ஸிம்ஹாஸனம் உண்டு பண்ணி வைத்தான்

பட்டண அமைப்பையும் அம்மன் தன் அழகையும்

பார்த்துப் பிரம்மதேவர் யோசிக்கின்றார்

நாட்டுக்குப் பதியான அம்மனுக்கிப்போ

நாயகர் வேண்டுமே (சோபனம் சோபனம்) 81.

தேவிக்குக் கணவனார் ஈசர் அல்லாமல்

ஜகத்திலே வேறே ஒருவரில்லை

அவருக்கோ ஆனால் சுடலையில் இருப்பு

அரவமும் எலும்புமே ஆபரணம்

சாம்பலும் பூசி சடையும் தரித்து

தலைமண்டை யோட்டையுங் கையில்கொண்டு

அம்பலத்தாடினார் இவருக்குக் கணவராய்

ஆகுவதெப்படி (சோபனம் சோபனம்) 82.

இப்படிப்பிரம்மா மனதிலெண்ணியதை

ஈசர் அறிந்து நல்ல ஒளியுடனே

முப்பதுகோடி மன்ம தாகார ரூபமாய்

வேஷந் தரித்ததி ஸுந்தரமாய்

மகுடகுண்டலத்துடன் அழகு பீதாம்பரமும்

மார்பில் சந்தனம் முத்துமாலையுடன்

மோஹனவேஷந் தரித்திருந்தப்படி தேவி

முன்னே நின்றாரீசன் (சோபனம் சோபனம்) 83.

நின்ற நிலையில் அதிஸுந்தரமான

லலிதாதேவிக்கு இசைந்த அழகும்

என்றும் பதினாறு வயதுந் தரித்துக் கொண்டு

இருக்கின்ற ஈஸ்வரரைக் கண்டு பிரம்மா

காமேஸ்வரரென்று பேருமிட்டவருக்கும்

கண்ணாட்டி லலிதேஸ்வரி தேவிக்கும்

ஓமென்று இவர்கள் இரண்டுபேருக்கும் இப்போ

விவாஹஞ் செய்யலாமென்றார் (சோபனம் சோபனம்) 84.

கமலாஸனருடைய ஆக்கினையால் விஸ்வ

கர்மாவும் மயனும் இருபேருமாய்

கமனீயமாய் ஸ்வர்ண ரத்னங்களாலே

கலியாண மண்டபம் உண்டாக்கினர்

வாழை, கமுகு, கரும்பு, பூச்சரங்களும்

வாடாதமாலையும் நிறைத்தார்கள்

கொழுந்து, பிச்சி மரு குடமல்லி இருவாக்ஷி

கோலாஹலம் செய்தார் (சோபனம் சோபனம்) 85.

சோடித்துக் கலியாணத் துக்கெல்லாம் பிரம்மாவும்

கோவிந்தருடைய சம்மதத்தாலே

ஒடுக்க வணக்கமாய் அம்மனைப் பார்த்து

உம்மைக் கணவருடன் பார்ப்போமென்றார்

மாதாவும் தன்னுடைய கழுத்திலிருந்ததொரு

மாலையைக் கழற்றி அம்பலத்தில் போட்டாள

நாதர் காமேஸ்வரர் கழுத்தி லந்தமாலை

ராஜியாய் சேர்ந்தது (சோபனம் சோபனம்) 86.

கீர்வாணர் வாத்தியம் பதினெட்டும் முழக்கினார்

கீர்வாணர் புஷ்ப வருஷஞ் சொரிந்தார்

ஊர்வசி முதலானோர் நர்த்தனஞ் செய்தார்கள்.

உடனே கல்யாண வேஷம் தரித்தாள்

ஈசருந் தேவியும் மாலையிட்டார்கள்

இருவரும் இருந்து கன்னூஞ்சல் ஆட

வாஸுதேவராலே உமையவளைத் தாரை

வார்க்கச்சொன்னார் பிரம்மா (சோபனம் சோபனம்) 87.

பத்மாஸனர் சொல்லால் நல்ல முஹூர்த்தத்தில்

பரிமளிக்கும் தேவஸபை நடுவே

பத்தினியுடன் கூட விஷ்ணுகாமேசருக்குப்

பக்தியாய் மதுவர்க்கந் தான் கொடுத்தார்

காமேஸ்வரருக்கு லலிதேஸ்வரியைக்

கன்னிகாதானம் செய்தார் மஹாவிஷ்ணுவும்

காமேஸ்வரரும் திருமங்கல்ய தாரணம்

கட்டினார் லலிதைக்குச் (சோபனம் சோபனம்) 88.

நெய்யால் ஹோமஞ்செய்து பாணிக்கிரஹணஞ் செய்து

ஈசர் அம்மனை அம்மி ஏற்றினார்

மெய்யாக அக்னியை மூன்று தரஞ்சுற்றி

முக்கண்ணர் பொரியினால் ஹோமஞ்செய்தார்

காமேச்வரரும் லலிதேச்வரியைத்தான்

கலியாணஞ் செய்து கொண்டார் ஸுகமாய்

பூமிமுதல் மூன்று லோகத்தவர்களும்
புகழ்ந்தார்கள் அகஸ்தியரே (சோபனம் சோபனம்) 89.

காமேச்வரருக்குங் காமேச்வரிக்கும்
கரும்பு வில்லுக்களைக் கொடுத்தார் பிரம்மா!
பூமீசர் விஷ்ணு கொடுத்தாருடனே
புஷ்ப பாணங்களை இருபேருக்கும்
வருணன் கொடுத்தான் பாசம் விச்வகர்மா வாழ்த்திக்
கொடுத்தான் இரண்டு துரட்டிகளை
உறங்காமல் அக்னி வாயுவுங் கொடுத்தார்கள்
ஒளியான அஸ்திரங்கள் (சோபனம் சோபனம்) 90.

அவரவராலே யான அஸ்திரங்களை
அம்பிகை முன் வைத்தார் அமரரெல்லாம்
கலியாணம் ஆனபின் ஸாம்ராஜ்ய அபிஷேகம்
காமேசருக்கும் காமேச்வரிக்கும்
பட்டாபிஷேகத்தைச் செய்தார் தேவரெல்லாம்
பரிபாலனஞ் செய்து ரக்ஷிக்கவே
பட்டண ப்ரவேசத்துக்குப் புஷ்பவிமானத்தைப்
பத்மாஸனர் செய்தார் (சோபனம் சோபனம்) 91.

பதினெட்டு வாத்தியம் மத்தளம் தாளங்கள்

பாட்டுப் புல்லாங்குழல் கேளிக்கையும்

மதயானை குதிரையும் கொடி  யாலவட்டமும்

வரிசையாய் முனிவரும் ஸ்தோத்தரிக்க

சோடித்து அம்மனையும் காமேச்வரரையும்

கோஷித்து விமானத்தி  லேற்றி வைத்துக்

கோஷமாய் தெருவீதி வரும் போது ஹாரத்தி

கோதையர் எடுத்தார்கள் (சோபனம் சோபனம்) 92.

<u>தேவி பண்டாஸுரன் மேல் யுத்தத்திற்குப் புறப்படுதல்</u>

ராஜக்கிரஹத்தில் வந்து சிம்ஹாசனத்தில்

நாதரோடுகூட இருந்தாள் தேவி

யாசித்த பேர்க்கெல்லாம் அபீஷ்டவரங்களைப்

பார்த்துக் கொடுத்தாள் அமிருதக்கண்ணால்

காமாக்ஷி என்ற பேர் கொடுத்துப் பிரம்மதேவாள்

காத்திருந்தாள் பதினாயிரம் வருஷம்

தேவியின் சந்நிதியில் தேவாள் காத்திருப்பதைத்

தேவியிடஞ் சொன்னார் நாரதர் (சோபனம் சோபனம்) 93.

ஸூரமுனி  வேண்டுதலால் தேவர் கிரஹங்களுக்குச்

சொல்லியனுப்பினாள் அம்பிகையும்

வரத்தாலே மதங்கொண்ட பண்டாஸூரனை  யினி

வதைக்க வேணுமென்று ஈச்வரியாள்

ரதகஜ துரக பதாதிகளுடன் கடல்
அலைபோல வருகின்றாள் சேனையுடன்
சதுரங்கமான சக்தி சேனைகளுடனே
சங்கரி வருகிறாள் (சோபனம் சோபனம்) 94.

ஸ்ரீசக்ரராஜ ரதத்திற் கொன்பது தட்டு
சிங்கார உருளைகள் நான்கு வேதம்
பூஜ்யமான தர்மார்த்த காமமோக்ஷம்
புனிதமான நான்கு குதிரைகளாம்!
ஆனந்தகொடிமரம் அதற்கு மேலழகாய்
ஐந்து யோசனை யகலம் முத்துக்குடை
முந்நூறு தேர்ப்படை முழுதுஞ் சக்திகள் வாராள்
முழுத்தேரும் தேவிக்குச் (சோபனம் சோபனம்) 95.

அம்மன் தொரட்டியில் இருந்துமொரு தேவி
ஸம்பத்கரி என்று உண்டானாள்
நன்மையாகவே பின்னும் அச்வாரூடையுதித்தாள்
நாகபாசத்திலே உண்டாகி
யானைகள் ஸம்பத்கரிக்குச் சேனையாம்
அச்வாரூடைக்குக் குதிரைகளாம்
தாயார் மந்திரிணியுடைய ஸ்ரீசக்ரத்தில்
தட்டுக்களேழுண்டு (சோபனம் சோபனம்) 96.

மந்திரிணி தேரிலும் ஸ்ரீசக்ரம் போலவே
மஹாசக்தி தேவிகள் நிறைந்திருக்காள்
விந்தையாய்ப் பதினாறு நாமத்தால் தேவர்கள்
மந்திரிணியை ஸ்தோத்திரங்கள் செய்தார்
சியாமளையுடைய திருக்கையிலிருந்து
தானும் பாணத்தோடொரு கோதண்டத்தை
நமஸ்கரித்தம்மனிடம் வாங்கியே மந்திரிணி
நாயகி வருகிறாள் (சோபனம் சோபனம்) 97.

தீர்க்கதண்டநாதை ஸ்ரீசக்ரத்தேருக்குத்
திட்டமாக ஐந்து தட்டுக்களும்
கர்க்கிகளான துர்க்கைகளும் அக்னி
துர்க்கைகளும் வன துர்க்கைகளும்
தர்க்கமில்லா நல்லவர்க்கங்களான ரண
அர்க்கிகளும் மிக நிஷ்களமாய்
அர்க்கவர்ணிகள் பல வர்க்கங்களால் எங்கும்
எக்காலும் தற்காப்பாள் (சோபனம் சோபனம்) 98.

வாராஹி தேரிலும் சக்திகள் இருக்கின்றார்
வாராஹிப் போன்ற பராக்கிரமமாய்க்
கோரமஹிஷம் மிருகம் சிம்ஹம் யாளிமேல்

கூட வருகிறார் சக்திகளும்

தண்டெடுத்துவரும் வாராஹியை போற்றி

அப்ஸர  ஸ்திரீ களும் தேவர்களும்

கண்டு பன்னிரண்டு நாமத்தால் வாராஹியைக்

கைகூப்பி ஸ்துதிக்கின்றார் (சோபனம் சோபனம்) 99.

இருபத்தைந்து நாமத்தாலே ஸ்ரீதேவியை

எல்லாத் தேவாளும் ஸ்துதி  செய்கின்றார்

ஒருவருக்கும் சொல்லக் கூடாது இதுகளை

உனக்குச் சொன்னோம் தன்யன் ஆனதினால்

இன்னுங்கேள் சொல்வோம் இனிமேற்றான் யுத்தங்கள்

இப்படி ஜகன்மாதா வருகிறாள்

பின்னுஞ் சக்திசேனை வருகின்றதைக் கேட்டால்

பில்லி சூன்யந்தீரும்  (சோபனம் சோபனம்) 100.

குந்தம் ஈட்டிவாள் பரசு பட்டயம் கத்தி

கோடாலி வில்லம்பு உலக்கைகளும்

மந்திரவாள் சூலம் கலப்பை முசலத்துடன்

வட்டக்கத்திகள் வெட்டுக்கத்திகளும்

வஜ்ஜிரஞ்  சமுதாடு கதைகள் பல்லயமும்

பாணம் பாசம் சக்ராயுதமுங் கொண்டு

வஜ்ஜிரமாகிய மந்திரிணி வாராஹி சேனையும்

வருகின்ற  திப்படிச்  (சோபனம் சோபனம்) 101.

பச்சை வர்ணி கீறுபச்சை வர்ணிபொது

பிச்சித் தொங்கல் வர்ணி மஞ்சள் வர்ணி

முச்சந்திவர்ணி முழுதும் நீலவர்ணி

மிச்சமுள்ள ஐந்து வர்ணிகளும்

துர்க்கை பிடாரியும் சடைச்சிகளும்

துய்ய வடிவுள்ள கேசிகளும்

கர்க்கியும் காளியும் இளங்கோபாளியும்

காளமேகம் போல் வாராள் (சோபனம் சோபனம்) 102.

பத்ரகாளிகள் ரணபத்ரகாளிகள், வீர

மர்த்தன காளிகள் ருத்ர காளிகளும்

நெற்றியில் நெருப்புகள் உள்ள காளிகளும்

சுற்றி வட்டமாய் வந்  துறுமிக்  கொண்டு

அஷ்ட நாகங்கள் அவர்களுக்  காபரணம்

அல்லாமலும் ரத்ன  க்ரீட  முதல்

பட்டை  யரைஞாண் ஒட்டியாணஞ் சலங்கை முதல்

பணிகளும் அவர்க்குண்டு (சோபனம் சோபனம்) 103.

கையில் முறுக்குவளை கணையாழி மோதிரம்

கனத்த கொங்கைக் கவசமும் சரப்பளியும்

துய்யவர்ணப்பட்டு துலங்கும் தோடுத் தக்கை

சோபிதமாய்த் தொங்கும் முருகு  முதல்

சந்திரப்ரபை சூரியப்ரபை தலையில் பின்னல்

சதுரான ராக்கோடி குஞ்சலமுங் கொட்டை

சிந்தூர சக்திகள் சுப  சகுனங்  கண்டு

தொகை தொகையாய் வாராள் (சோபனம் சோபனம்) 104.

இன்னமுண்டு வைரவாள் பூதகணங்கள்

இந்தச் சேனை எண்ணத் தொகைகள் இல்லை

சொன்னோ மின்னம் இவர் வாஹனங்களைக்கேள்

தொகையில்லாத் தேர்களும் யானைகளும்

வாயுவேகமான வேகக் குதிரைகளும்

ஆயிரங்கோடி சிம்ஹவாகனமும்

வாயு  கருடனொக்கும் பூதங்கள் முதலாய்

வாஹனங்களில் வாராள் (சோபனம் சோபனம்) 105.

ஆலவட்டம் வெண்கத்திக் குடைகள் கொடிகள் கொண்டு

அஸுராள்மேல் கோபிஷ்டைகளாகக்

கோலாஹலமாக யுத்த பேரி  வாத்யம் முழங்க

கொடி பறக்க அணியணியாய் வாராள்

தேவ வாத்தியம் முழங்க கந்தர்வர் கானம் பண்ண

தேவதாஸிகள் நாட்டிய  மாடிவர

தூய முனிவர் மலர் சொரிய லலிதேச்வரி
சுகத்துடன் வருகிறாள் (சோபனம் சோபனம்) 106.

தேவி யுத்தத்திற்கு வருகின்றதைக் கேட்டு
திடுக்கிட்டுப் பண்டாஸுரன் சபையில்
கோபத்துடனே சிம்ஹா சனத்தி லிருந்து
கூடிய அஸுராளோடு யோசித்தான்
இடிபோல் அட்டகாசஞ்செய்தான். கோட்டை வாசல்கள்
எல்லாவற்றிலும் காவல் வைக்கச் சொன்னான்
குடிலாக்ஷன் மந்திரியை யுத்தத்திற் கனுப்பினான்
கோபிஷ்டை லலிதையுடன் (சோபனம் சோபனம்) 107.

அஸுரபதியுடைய வார்த்தையைக் கேட்டு மந்திரி
அதிக ஸைன்யஞ் சேனாபதிகளுடன்
இசைந்து நாற்பது க்ஷௌஹிணி சேனைகளைக் கொண்டு
எல்லா வாசல்களையும் காக்கச் சொன்னான்
துர்மதனை யுத்தத்திற்குப் போகும் படிக்குச்
சொல்லியனுப்பினான் சேனையுடன்
துர்மதனை சம்பத்கரியம்மன் வதைத்து
நிர்மூலமாக்கினாள் (சோபனம் சோபனம்) 108.

உரண்டி சம்பத்கரியால் உருண்டான் துர்மதனென்று

மருண்டு வந்தஸுரர்கள் முறையிட்டார்கள்

வெகுண்டு பண்டாஸுரன் குண்டனையனுப்பினான்

உருண்டான் அவனும் அச்வாரூடையாலே

புரண்டான் குண்டனென்று தப்பி ஓடிவந்தபேர்

மருண்ட பண்டனிடம் மிரண்டு சொன்னார்

கரண்டி எண்ணெயைக் காய்ச்சி வெந்த புண்ணில் விட்டார் போல்

கலங்கினான் பண்டனும் (சோபனம் சோபனம்) 109.

கரங்கர் முதலைந்து சேனாபதிகளையும்

துரங்காதி ஸேனையோ டனுப்பி வைத்தான்

கடுவிஷமாயையையும் சர்ப்பேணிப் பிசாசையும்

துரங்கனோடுகூட அனுப்பி வைத்தான்

பாவி சர்ப்பேணி அஸுரன் ஆக்கினையாலே

பாம்புகளைப் பெற்றாள் தன் தேகத்தால் !

ஏவினாள் பாம்புகளைச் சர்ப்பேணிச் சக்திகள் மேல்

எல்லாச் சக்திகட்கும் ஜயம் (சோபனம் சோபனம்) 110.

விதவித சர்ப்பங்கள் விஷத்தைக் கக்கிக்கொண்டு

விழுந்ததுகள் சக்தி சேனையின் மேல்

இதைக் கண்டு நகுலி யம்மன் கருடன் தோளில்

இருந்ததி வேகமாய் ஓடிவந்து

பாம்புக்கு மிருத்யுவாம் கீரிப்பிள்ளைகளைப்

பல்லுகளிலிருந்து விழவடித்தாள்

அம்மெட்டுப் பாம்பையும் துண்டாக்கியது

அம்மன் கீரிப்பிள்ளைகள் (சோபனம் சோபனம்) 111.

சீறிக்கொண்டு கீரிப்பிள்ளைகள் ஒன்றாய்க் கூடி

சேனை யானை குதிரை அஸுராள் மேலே

ஏறிப்பிடித்துக் கடித்த க்ஷ்ளஹினிகள்

எல்லா அஸுரப்பேயையும் நொறுக்கித்துக்கள்

ஐந்து கரங்கர் கழுத்துக்களையும்

பிஞ்சுபோல் நறுக்கினாள் நகுலேச்வரி

அஞ்சாத நகுலிக்கு அங்கே தேவிமணியும்

அம்மன் மந்திரிணி ஈந்தாள் (சோபனம் சோபனம்) 112.

இவர் போனபின்பு பண்டாஸுரன் அனுப்பினான்

ஏழு பிலாஸ்கரர் மந்திரி ராணுவமும்

அவர் கண்ணில் சூரியனை வருத்தி வரத்தாலே

அம்மன் சேனையை ஸ்தம்பிக்கச் செய்தான்

பிலாஸ்கரர் ஸ்தம்ப னதைக் கண்டு தேவியின்

ஆக்கினையால் தண்டணி விசையாய் வந்தாள்

குருடாகி முன்னெழு மந்திரி தலைகளைக்

கொய்து மாலை தரித்தாள் (சோபனம் சோபனம்) 113.

மடிந்தார் மந்திரி என்று கேட்டுப் பண்டாஸுரன்
வந்து தம்பிமார்களுடன் யோசித்துக்
குடிலாக்ஷனை பின்னுஞ் சேனையோடனுப்பினான்
கொட்டிப் பெரிய யுத்தம் பண்ணச்சொன்னான்
லலிதையைப் பிடித்துக் கொண்டு வரச் சொல்லி
ஒளித்தனுப்பினான் தம்பி விஷங்கனையும்
களவு செய்யச் சொன்னான் பதினைந்தஸுராளுடன்
காமேச்வரிக்கு ஜயம் (சோபனம் சோபனம்) 114.

அஸ்தமித்தபின்னே மலகன் முதல்பதி
னைந்து அஸுராளோடே மெள்ள வந்து
சுற்றிலும் பதினைந்து அக்ஷௌஹிணியால் தேரைச்
சுற்றி வளைத்துக் கொண்டான்; விஷங்கனப்போ
தேரின் முதல் தட்டில் இருக்கின்ற சக்திகள்
தேவிக்கு முறையிட்டு அலறினார்கள்
கோரமாய்க் குடிலாக்ஷன் யுத்தஞ் செய்கிறான்
குறைவில்லை லலிதைக்கு (சோபனம் சோபனம்) 115.

பின்னே கள்ளர் வந்து செய்யுங் கலஹத்தைப்
புரட்டுச் செய்கையைத் தேவி  யறியாமல்
முன்னே தண்டநாதைச் செய்கின்ற சண்டையின்
வேடிக்கை பார்த்தம்ம னிருந்துவிட்டாள்

துரோகி விஷங்கன் ஒரு பாணத்தால் தேரின்

துலங்குங் கொடி தன்னை அறுத்துவிட்டான்

வேகமாய்ப் புருவங்களை அம்மன் கோபத்தால்

வில்லுப் போல் வளைத்தாள் (சோபனம் சோபனம்) 116.

மாதா முகத்தினுட கோபத்தி லிருந்த

மானிகள் பதினைந்து காமேச்வரிகள்

பாதக அஸுரனைக் கொல்ல அம்ம னனுப்ப

புறப்பட்டாள் ஜ்வாலாமாலினி முதல்

மலகன் முதற் பதி னைந்தஸுராளையும்

வந்த சேனையைக் கொன்றாள் காமேச்வரிகள்

மெலிந்த விஷங்கனைக் கொல்லாமல் துரத்தியே

லலிதையின் முன்வந்தார் (சோபனம் சோபனம்) 117.

குடிலாக்ஷனையும் துரத்தினாள் வாராஹி

கூடிவந்த அஸுராளைக் கொன்றாள்

விடியற்காலங்கண்டு விஷங்கன் செய்ததுகளை

விசையாய் மந்திரிணி தண்டநாதையுமாய்

அம்பாளிடத்தில் சொல்லி ஜ்வாலாமாலினியாலே

அக்கினிக் கோட்டையைப் போடச் சொன்னாள்

தென்புறம் வீதியொரு யோஜனை வாசலில்

ஸ்தம்பினியும் காவல் (சோபனம் சோபனம்) 118.

முப்பது யோஜனை உயரமுள்ள கோட்டை

முழுவதும் நூறு யோஜனை சுற்றளவு

இப்படி ஸ்ரீசக்கரத்தேருஞ் சேனையுங்கொண்டு

இருக்கின்றார் சக்திகள் தீக்கோட்டைக்குள்

தம்பியும் மந்திரியும் தப்பி வந்ததையும்

சலியாத தீக்கோட்டை மஹிமை கேட்டு

அன்பாய் முப்பது பிள்ளைகளைப் பண்டன் சண்டைக்கு

அனுப்பினான் தேவிமேல் (சோபனம் சோபனம்) 119.

<u>லலிதாகுமாரியாகிய பாலாம்பிகையால்  பண்டபுத்திராள் வதம்</u>

பண்டபுத்ராள் சண்டைக்கு வந்ததைக்கண்டு

பாலாம்பாளைத் தேவி  யனுப்பி வைத்தாள்

கண்டித ரதத்தினில் ஏறிக்கொண்டு வந்தாள்

தண்டினி மந்திரிணி துணையாய் வந்தாள்

பண்டபுத்ராளையும் வந்த அஸுராளையும்

கண்டங்கண்டமாய்ச் சேதித்துத் துண்டமிட்டாள்

மண்டலம் புகழத் தேவாள் புகழ்மாலை

மாதா அருகில் வந்தாள் (சோபனம் சோபனம்) 120.

<u>விநாயகமூர்த்தியால் விக்னயந்திரமழிதல்</u>

பாலாதேவி கையால் பிள்ளைகள் மாண்டதைப்

பண்டன் கேட்டுப்புலம்பி அழுதான் மெத்த

கொலை பாதகன் விக்னயந்திரஞ் செய்யச் சொல்லிக்

கொடூரன் விசுக்கிரனை அனுப்பி வைத்தான்

துஷ்டவிசுக்கிரன் அக்னிக் கோட்டையில் வந்து

சுற்றி உள்ளே போகமாட்டாதே

கெட்டவன் பாறையில் எட்டுத் தேவதே யந்திரம்

சீறி ஏவினான் கேளும் (சோபனம் சோபனம்) 121.

யந்திரத்தால் சக்திகள் புத்தி மயங்கியே

எல்லோரும் ஸ்தம்பித்து இருந்தார்கள்

தண்டினி மந்திரிணி அம்பா ளிடத்திற்குச் சொல்ல

மாதாவும் காமேசர் முகத்தைப் பார்த்தாள்

சக்தி கணபதி சுத்த லக்ஷணத்துடன்

திடுமென்று குதித்து வந்து யந்திரத்தைக்

குத்தித் தன் கொம்பாலே தூளாய்ப் பறக்க விட்ட

குஞ்ஜர முகர்க்குச் (சோபனம் சோபனம்) 122.

காதாலேழுகோடி சேனைகளையும்

கணபதியு மப்போ உண்டாக்கி

அறுபத்தியாறு சேனாதிபதிகளையும்

சிருஷ்டித்து அந்த விசுக்கிரன் சேனைகளை

அடியோடு வதைத்து அவன் சேனாதிபதியாம்

யானை முகாஸுரனையும் வதைத்தார்

அம்பாள் வரங்கொடுத்தாள் கணபதிக்கப்போ

அனைவரும் பூஜிக்கச் (சோபனம் சோபனம்) 123.

<u>பண்டாஸுரன் தம்பிகள் இருவரின் கதை</u>

சக்திகளுக்கு மப்போ புத்தி தெளிந்தது

தமையன் முன் ஓடிப்போனான் விசுக்கிரன்

பித்தன் பண்டாஸுரன் விசுக்கிர விஷயங்களைப்

பின்னு மனுப்பினான் ஜயிக்கச் சொல்லி

இருவரும் நானூறு க்ஷௌஹிணி சேனையுடன்

எல்லாச் சேனாபதியையுங் கூட்டிக்கொண்டு

ஆடம்பரமாய் அக்னிக்கோட்டை வாசலில் வந்தார்

அந்தச் சக்திகளுக்குச் (சோபனம் சோபனம்) 124.

விஷங்கனொ டெதிர்த்தாள் மந்திரியிணியும் பொல்லா

விசுக்கிரனை எதிர்த்தாள் வாராஹிதேவி

அச்வாரூடை முதலான பேரெதிர்த்தாள்

அந்தச் சேனைகள் அக்ஷௌஹிணிகளையும்

வஞ்சக விசுக்கிரன் பாண வருஷத்தால்

வாடி மெலிந்து சக்தி சேனைகளும்

அம்பாளின் சேனைகள் அஸ்திரத்தின் தாபத்தால்

அம்மனை வேண்டினார் (சோபனம் சோபனம்) 125.

மந்திரிணி உரையாலே வாராஹி சிந்துவைச்
சக்திகள் தாபந்தீர அழைத்தாள்
வந்து சொரிந்தது சுத்த கங்சா தீர்த்தம்
வாரணத்துக்கைபோல் இரண்டு சாமம்
வேண்டிய மட்டும் குடித்தே சக்திகளெல்லாம்
வெகு தாகந் தீர்ந்து பலமடைந்து
தேகக்களைகள் தீர்ந்து சக்தி சேனைகளெல்லாம்
ஜயத்துடன் எதிர்த்தார்கள் (சோபனம் சோபனம்) 126.

வந்த அக்ஷௌஹிணி தனில் ஒற்றைப் பங்கையும்
மந்திரிணி வதைத்தாள் விஷங்கனையும்
சீறிக்கொண்டு வதைத்தாள் மற்றொற்றைப் பங்கை
வாராஹி வதைத்தாள் விசுக்ரனையும்
வந்த சேனைகளின் மற்ற ஒரு பங்கையும்
மருண்டிட வதைத்தாள் அச்வாரூடை
அறிந்துகொள் மூன்று நாள் யுத்தம் முடிந்ததினி
அம்மனுக்கே ஜயம் (சோபனம் சோபனம்) 127.

<u>பண்டாஸுரன் யுத்தத்திற்கு வருதல்</u>

சேனாதிபதிகள் முதல் தம்பிகள் வரைக்கும்
செலவாய்ப் போனதைக்கேட்டுப் பண்டாஸுரன்

மானங்கெட்டவன் இன்னும் பின்னதி கோபமாய்

மஹேச்வரியை வைது திட்டிக்கொண்டு

கடித்துக்கொண்டான் பற்களை யும் உதட்டையும்

கண்களிலே அனல் பொறி பறக்கக்

குடிலாக்ஷனைப் பார்த்து ஆக்கினை செய்கின்றான்

கிப்பக்குழந்தாய் கேள் (சோபனம் சோபனம்) 128.

கேளாய் குடிலாக்ஷா லலிதை யென்பா ளொருத்தி

கேடு செய்தாள் நமக்கினியவளை

வாளாலே லேசுலேசாகவே கொய்கிறோம்

வரவிடுவாய் என்றன் சேனையெல்லாம்

முங்கோட்டை வாசலில் காக்கும் சேனையைத்தள்ளி

மிச்சம் மீதியாயுள்ள சேனையெல்லாம்

பெண்கள் தவிர மற்றப் பேர்களும் புறப்பட்டார்

பெண்கொடி லலிதைக்கு (சோபனம் சோபனம்) 129.

கழுதை கட்டின தேர்கள் குதிரை கட்டின தேரும்

கடுவாய்க் கரடி சிம்ம ஒட்டை முதல்

கழுகுக்கொடி கோழி காக்காய் பருந்துமுதல்

கரும்பன்றி செந்நாய்கள் பாம்புகளும்

பூதப்பிரேத வேதாள வாகனத்திலும்

பின்னும் அநேக வாகனத்திலும்

விதவிதமாய்  ஆயுதங் கொண்டு வருகின்றான்
விச்வேச்வரிக்கு ஜயம்  (சோபனம் சோபனம்) 130.

இரண்டாயிரத் திருநூற்றைம்பத்தஞ்  சக்ஷௌஹிணி
சேனைகள் தன்னை நடத்திக்கொண்டு
பண்டாஸூரனுந் தேரிலேறியே புறப்பட்டான்
அபசகுனங்  கண்டார் அஸூராளங்கே
முன் பூமி நடுங்கிற்று ஆகாயத்திலிருந்து
முன் விழுந்தது ரத்தஞ் சோனையாக
கொம்பானைகளுடைய கொம்புகள் முறிந்தன
குல நாதைக்கே ஜயம்  (சோபனம் சோபனம்) 131.

எந்த உற்பாதமும் எண்ணாமல் வருகிறான்
இலவம்பஞ்சு காற்றில் பறக்கின்றாப்போல்
பொல்லாத காலத்தில் பண்டாஸூரன் சேனை
புறப்பட்ட தம்மனை ஜயிக்கவென்றே
துஷ்டப்பண்டாஸூரன் வருவதைக் கண்டு
சூரிய சந்திரன் ஏழு சமுத்திரமும்
அஷ்டதிக் கஜங்களும் அலறி நடுங்கிற்று
அம்மனுக்கே ஜயம்  (சோபனம் சோபனம்) 132.

<u>லலிதாம்பிகையுடன் பண்டாஸூரன் யுத்தம் செய்தல்</u>

இப்படிப் பண்டாஸுரன் வந்து சேனையை

ஏவினான் சக்தி சேனையை அடிக்க

அப்போ சக்திகள் கண்டு அதிகோபத்துடனே

அக்கினிக் கோட்டைக்கு வெளியில் வந்தாள்

மஹாராஜ ராஜேச்வரி லலிதாம்பிகை

வம்பன் பண்டாஸுரன் வருகை கண்டு

ஓஹோ இவனே வேறு  வெல்வாரில்லை - என்று

யுத்தமுனையில் வந்தாள்  (சோபனம் சோபனம்) 133.

அக்கினிக்கோட்டைக்கு வெளியில் வந்தாள்

ஸ்ரீசக்கரத்தில் சுபசகுனங் கண்டாள்

ஒப்பற்ற அஸுராள் தம்பட்ட முரசுகள்

உக்கிரமாய்க் கொம்புகள் ஊதிக்கொண்டு

சக்திதேவிகளை அஸுரர்கள் எல்லோரும்

சண்டை பிடித்  தடிக்கத் துவங்கினார்கள்

சக்திதேவியர்கள் அப்போ அஸுர சேனைகளை

ஸம்ஹரிக்கின்றார்கள் (சோபனம் சோபனம்) 134.

சுற்றிலுந்தேவிகள் அஸுரசேனைகளைச்

சுற்றிப்பிடித்  திழுத்துக் கத்தியாலே

குத்துகிறாள் சிவசக்தி ஈட்டிகளாலே

பொத்தென்று தலைவிழ வெட்டுகின்றாள்

செண்டு செண்டாய் யானை துண்டந் துண்டமாய் விழக்
கண்டங் கண்டமாய் குதிரைகள் விழ
மண்டைகளும் அஸுராள் உடல்களும் உருளுது
மஹாதேவிக்கே ஜயம் (சோபனம் சோபனம்) 135.

சக்திகள் அஸுர சேனைகளே எல்லாம்
ஸம்ஹரிக்க யுத்த பூமிதனில்
அஸுராள் தேஹத்தினின்றும் ரத்தவெள்ளம் பெருகி
அலைமோதும் காவேரி நதியைப்போல
யுத்த பூமிதனில் ரத்த ஆற்றங்கரை
ஓடுது பிணங்களும் மிதந்து வர
சங்கையில்லா அஸுரர்களை வதைத்துச்
சங்கரி ஜயங்கொண்டாள் (சோபனம் சோபனம்) 136.

ரத்த நதியின் இருகரை தன்னிலுஞ் சாய்ந்து
கிடக்கின்ற விருட்சங்கள் என்னவென்றால்
தலைபோன அஸுராளின் தேஹங்கள் எங்கிலும்
தறிபட்ட கட்டை போல் கிடக்கின்றன.
அஸுராள் கொடிகளும் முகத்துடன் கண்களும்
அல்லிக் கொடியும் மலரும் போல் அஸுராள்
குடைகளுக்கெல்லாம் தாமரைப் பூவைப்போல்
(அந்) நதியினில் கிடக்கும் (சோபனம் சோபனம்) 137.

யுத்தபூமிதனில் ரத்தப் பிரவாஹம்
ஓடுவதைக் கண்டு தேவரெல்லாம்
சக்திசேனையினால் அத்தனை அஸுராளும்
ஸம்ஹரிக்கப்பட்டுக் கிடப்பதையும்
அத்தனை யானை குதிரை சேனைகளைல்லாம்
ஆமைபோல் மிதக்க ரத்த நதியில்
சித்தம் மகிழ்ந்து பாரிஜாதப் புஷ்பங்கள்
தேவிக்கு சொரிந்திட்டார் (சோபனம் சோபனம்) 138.

தேவர்களுஞ் சொர்ண புஷ்பமாரி சொரிந்து
திவ்விய சகுனங்களைக் காட்டினார்கள்
கோபத்துடனே பண்டாஸுரன் விழிசிவக்கவே
கொடூரமாய் உருட்டி விழித்துக் கொண்டு
தன்சேனை அஸுராளுக் கபஜயத்தைக் கண்டு
தாய் லலிதா தேவியை எதிர்த்தான்
அஞ்சாமல் தேவியும் பண்டாஸுரனைப் பார்த்து
அதிகக் கோபங் கொண்டாள் (சோபனம் சோபனம்) 139.

கண்டகன் பண்டனைக் கண்டவுடன் தேவிக்கு
கண்களிரண்டும் அக்கினிபோல் சிவக்க
மண்டலம் புகழ்கின்ற சண்ட ப்ரசண்ட

உத்தண்டமான கோதண்ட வில்லை

வட்டமாய் நாணாலே கட்டி இழுத்தாளம்மன்

முட்டிவிட்டாளெங்கும் திடுக்கிடவே

துஷ்டனா மஸுரனைப் பொட்டென வதைக்கவே

சட்டமிட்டாள் மனதில் (சோபனம் சோபனம்) 140.

<u>பண்டாஸுரனால் ஏவப்பட்ட மாயா அஸுரார்களை</u>

<u>அம்பிகையால் ஏவப்பட்ட மாயா சக்திகள் அழித்தல்</u>

தொடுத்தார் யுத்தத்திற்குத் தேவியும் பண்டனும்

தொகையில்லாச் சரமாரிகளைச் சொரிந்தார்

இடைவிடாமல் சரங்களைச் சொரிந்தாளம்மன்

இதைக் கண்டு பண்டாஸுரன் கோபமாய்

மாயையால் இருட்டவிட்டான் அஸுரன் அதை

மாதாவும் சூர்யாஸ்திரத்தால் போக்கினாள்

பேயன் குருடாஸ்திரம் விட்டான் அதையும்

போக்கிற்று நேத்திராஸ்திரம் (சோபனம் சோபனம்) 141.

வாயுவின் அஸ்திரத்தைப் பண்டாஸுரன் போட்டான்

பார்வதி வருணாஸ்திரத்தால் போக்கினாள்

ஓயாத வியாதிகளை அனுப்பி வைத்தான் பண்டன்

ஒன்று பத்து நூறு கோடியாக

அச்சுதானந்த கோ விந்த நாமத்ரய

அஸ்திரத்தை  யம்மன் அனுப்பிவிட்டாள்
மிச்சமில்லாமலே வியாதிகளையந்த
அச்சுதர் போக்கினார் (சோபனம் சோபனம்) 142.

அந்தகாஸ்திரத்தை அனுப்பி வைத்தான் பண்டன்
அம்பிகை மிருத்யுஞ்ஜயனால் ஜயித்தாள்
மந்திரத்தால் சும்பநிசும்பன் சண்டமுண்டன்
மஹிஷாஸுரனை  யவன் அனுப்பிவைத்தான்
அனுப்பிவைத்தான் அதைக்கண்டு மஹேச்வரி
அட்டஹாஸம் செய்தா  ளதிலிருந்து
அம்மன்  அட்டஹாஸத்தால் துர்க்காதேவி யுண்டாகி
அஸுராளை ஸம்ஹரித்தாள் (சோபனம் சோபனம்) 143.

முன்னே வேதங்களைத் திருடின சோமுகன்
முதலான அஸுராளை அனுப்பி வைத்தான்
தன்னையடுத்தபேர்க்கு அபயங்கொடுத்துத்
தற்காக்கும் வலக்கைக் கட்டைவிரலை
உதறிவிட்டாளம்மன் அதிலேயிருந்து
உண்டாகி வந்து மச்சமூர்த்தியும்
வதைத்தந்த அஸுராளெல்லாரையும் ஜயித்த
மச்சாவதாரர்க்குச் (சோபனம் சோபனம்) 144.

சமுத் திரத்தை வருத்திவிட்டான் பண்டன்

சக்திசேனைகளை முழுகடிக்க

நிமிஷத்தில் அம்மன் உதறினா ளப்போது

நீட்டி ஆள்காட்டி விரல் தனையும்

குதித்தாருடனே யதிலே யிருந்து

கூர்மாவதார மஹாவிஷ்ணுவும்

கொந்தளிக்கும் சமுத்ரங் களெல்லாங் குடித்த

கூர்மாவதாரர்க்குச் (சோபனம் சோபனம்) 145.

இரணியாக்ஷனை அதிகோபத்துடனே

இந்தப்பண்டாஸூரன் அனுப்பிவைத்தான்

வராஹ மூர்த்தியும் உண்டானா ரப்போ

வலக்கை நடுவிரலில் இருந்து

பொல்லாத ஹிரண்யாக்ஷ அஸுரர்களை யெல்லாம்

சற்றுப் போதைக்குள்ளே ஸ்ம்ஹரித்தார்

வெல்ல முடியாத ரூபந் தரித்த லக்ஷுமி

வராஹமூர்த்திக்குச் (சோபனம் சோபனம்) 146.

இரணியகசிபு முதலானஸூராளை யெல்லாம்

இந்தப் பண்டாஸூரன் வருத்திவிட்டான்

பரமேச்வரியும் வலக்கைப் பவித்திர

விரலை யசைத்தாள் அதிலிருந்து

அதிபராக்கிரம நரஸிம்மரும் வந்து

அஸுர ஹிரண்யனை ஸம்ஹரித்தார்

நாகசயனர் பக்தர் பிரஹலாதர் லக்ஷ்மி

நரஸிம்ம மூர்த்திக்குச் (சோபனம் சோபனம்) 147.

மஹாபலி முதலான அஸுரசேனைகளை

வருத்திப் போகச் சொன்னான் பண்டாஸுரன்

மஹாமாயையும் வலக்கைச் சுண்டுவிரலைச்

சுழட்டியே உதறினாள் அதிலிருந்து

வந்தார் மஹாவிஷ்ணு வாமன மூர்த்தியாய்

மஹாபலி அஸுரனையும் ஜயித்து

மஹாபலியை பாதாளத்தில் தள்ளின

வாமன மூர்த்திக்குச் (சோபனம் சோபனம்) 148.

கார்த்த வீர்யார்ச்சுனனைச் சேனைகளுடன்

கண்டகன் பண்டன் அனுப்பிவைத்தான்

ஆர்த்திகளைப்போக்கும் லலிதேச்வரியும்

அசைத்தாள் இடக்கைக் கட்டைவிரலை

பரசுராமர் கையில் கோடாலி கொண்டு

புறப்பட்டார் வெள்ளி வலையைப் போல

பலமுள்ள கார்த்தவீர்யார்ச்சுனனை வதைத்தப்

பரசுராமருக்குச் (சோபனம் சோபனம்) 149.

இராவணனைக் கும்பகர்ண னிந்திரஜித்தனை
இராட்சதாளை யவன் அனுப்பிவைத்தான்
தேவியும் இடக்கையின் ஆள்காட்டி விரலைச்
செப்பிடு வித்தைபோல் உதறினாளே
ஸ்ரீராமலக்ஷ்மணர் ரதத்திலிருந்து கொண்டு
ராவணன் முதலோரை வதைகள் செய்தார்
தாமஸியாமல் ராக்ஷதாளை வதைத்த
(ஸ்ரீ) ராமலக்ஷ்மணருக்குச் (சோபனம் சோபனம்) 150.

வானரங்களையும் வருத்திவிட்டான் பண்டன்
மலைமலையாகவே தேவிமேலே
விஜய அம்பாள் தன் இடக்கை நடுவிரலை
மின்னல் மின்னினாற்போல் உதறினாளே
பலபத்திரரும் வந்தார் கைலாச மலைபோலப்
பெரிய உலக்கைக் கலப்பை கொண்டு
உலக்கைக் கலப்பையால் குரங்குகளைக் கொன்ற
உக்கிரபாலருக்குச் (சோபனம் சோபனம்) 151.

சிசுபாலன் கம்ஸன் சகடன் பூதன் தன்னை
துஷ்டன் பண்டாஸுரன் அனுப்பிவைத்தான்
விச்வேச்வரியும் இடக்கைப் பவித்திர

விரலை அசைத்தாள் அதிலிருந்து

சங்கர்ஷணன் ப்ரதயும்னன் அநிருத்தனாகவே

ஸ்வாமி வந்தவர்களை ஸம்ஹரித்தார்

சங்கர்ஷணன் ஸ்ரீகிருஷ்ணன் அநிருத்தன் ப்ரத்யும்னன்

ஸ்வாமி நாலுபேருக்கும் (சோபனம் சோபனம்) 152.

கலியுகாஸ் திரத்திலே கக்கும் மிலேச்சரைக்

கண்டகன் பண்டன் அனுப்பிவைத்தான்

கல்யாணியும் இடக்கைச் சுண்டு விரலைக்

காட்டி அசைத்தாள் அதிலிருந்து

அட்டஹாஸத்துடன் கல்கி அவதாரமாய்

அச்சுதரும் வந்தார் அந்தக்ஷணம்

முரட்டுத்தன முள்ள மிலேச்சரை வதை செய்த

முரஹரி கல்கிக்குச் (சோபனம் சோபனம்) 153.

பின்னும் அனேகம் மோஹனாஸ்திரந் தன்னைப்

பூட்டிவிட்டான் சக்திசேனையின் மேல்

அந்நேரம் அம்மனும் சாம்பவர் அஸ்திரத்தில்

அதையும் விமோசனம் செய்துவிட்டாள்

அக்ஷௌஹிணி சேனையை நாராயணாஸ்திரத்தால்

பஸ்ம மயமாக ஆக்கிவிட்டாள்

துஷ்டன் குடிலாக்ஷன் முதல் சேனாதிபதிகளைச்

சிதைத்தாள் பாசுபதத்தால் (சோபனம் சோபனம்) 154.

பின்னும் அனேகம் அஸ்திரத் தாலவன்
அக்ஷௌஹிணி சேனை போன பின்பு
என்ன பலம் லலிதாதேவிக்கு என்று
ஏங்கி விழிக்கின்றான் பண்டாஸுரன்
அம்மனும் தம்முடைய நாதர் காமேசரை
அந்தரங்கத்திலே தான் நினைத்துக்
காமேசர் அஸ்திரத்தால் ஜயம் வரட்டுமென்று
கணவரை வேண்டினாள் (சோபனம் சோபனம்) 155.

<u>பண்டாஸுரன் வதம்</u>

கண்டகன் பண்டாஸுரனை வதைக்கவென்றே
காமேசர் அஸ்திரங் கொடுத்தார்
வாங்கிக்கொண்டு அம்மன் காமேசர் அஸ்திரத்தை
மண்டலாகாரமாய் வில்வளைத்துக்
கோடிசூரியன் போன்ற காமேசர் பாணத்தைக்
கோதண்டத்தில் வைத்து மந்திரித்து
வேடிக்கையாகவே காது பரியந்தம்
விசையாய் இழுத்துவிட்டாள் (சோபனம் சோபனம்) 156.

தேவி பிரயோகித்த அஸ்திரந் தானப்போ

தேவேந்திரன் வஜ்ஜிராயுதத் தடிபோல்

தாவிப் பண்டாஸுரன் மார்பிலே பாய்ந்தது

தரணியிலே விழுந்து உயிரைவிட்டான்!

அஸ்திரமுடையாளின் அக்கினி ஜ்வாலையாலே

அவனுட  புரங்களும் வெண்ணீராச்சு

அஸ்தமனத்தில் பண்டாஸுரனை வதைத்து

அம்மன் ஜயங்கொண்டாள் (சோபனம் சோபனம்) 157.

புஷ்பம் பன்னீர்களைச் சொரியவே தேவர்கள்

புகழ்ந்து  ஸகிகள் வெண்சாமரம் வீச

அப்பொழுது தேவி சக்திசேனையுடன்

ஆலயத்தை அம்மன் வந்தடைந்தாள்

ஆயுதங்களால அடிபட்ட சக்திகள்

காயத்தை அம்ருதக்கண்ணால் போக்கினாள்

நோய்கள் போனதுபோல ஸுகம் பெற்றார் பூமியும்

புனிதமாய் செழித்தது (சோபனம் சோபனம்) 158.

மும்மூர்த்திகள் முதல் முப்பத்து முக்கோடி

தேவர்கள் முனிவர்கள் பிராம்மணிகளும்

அம்மனை வந்து அடிபணிந்து கொண்டு

அற்புதமான ஸ்துதிகள் செய்தனர்

அமராளும் மன்மதன் தேவி ரதியைக்காட்டி

அறிவித்தார் மதனனை எழுப்பவென்றே
இம்மாத்திரம் தயவு செய்ய வேண்டுமம்மா
எங்களுக்காக வேண்டிச் (சோபனம் சோபனம்) 159.

இந்த ரதியுடைய கணவன் மன்மதனை
எழுப்பித் தந்து எங்கள் மனங்குளிர
எவ்விதமாவது தயவு செய்து ஈசரும்
ஈச்வரியைக் கூடி சுப்ரமண்யர்
பிறந்து தாருகன் முதல் அஸுரர்களை வதைத்தால்
பிறகு சங்கடமில்லை எங்களுக்கு
கூடியே தேவர்கள் எல்லோருங் கைகளைக்
கும்பிட்டு நின்றார்கள் (சோபனம் சோபனம்) 160.

கண்டவுடன் ரதிதேவியை, அம்மன்
காமேசர் முகத்தை ஆதரவாய்ப் பார்த்தாள்
உண்டாய்விட்டான் மதன் வஜ்ஜிர தேஹத்துடன்
உடனே தாயாரை நமஸ்கரித்தான்
அனுக்கிரஹித்தாள் தேவி மன்மதனுக்கு
ஆருமினி யவனை ஜயிக்காமல்
வானவரும் இனி ஜயிக்கமாட்டாரென்று
வரமுங் கொடுத்துச் சொல்வாள் (சோபனம் சோபனம்) 161.

குழந்தாய் உனக்குப் பயமில்லை இனிமேல்

கூட்டிவை பார்வதியுடன் ஈசரை

தழுதழுத் துன்னுட பாணத்தால் சங்கரர்

தானே விவாஹஞ் செய்வார் பார்வதியை

ஒருவர் கண்ணுக்கும் இனி அகப்பட மாட்டாய்

உன்னைத் தூஷித்த பேர் அண்ணா கள்ளர்

சற்றும் பயமில்லை நாமிருக்கின்றோ மென்று

சங்கரி யனுப்பினாள் (சோபனம் சோபனம்) 162.

<u>குமாரமூர்த்தி அவதாரமாகி தாருகன் முதலிய அஸுராளை வதைத்தல்</u>

அம்மன் அனுக்ஞையால் மதனன் பூச்சரத்தாலே

அடித்தான், பார்வதி தேவி பரமேசரை

வந்து விவாஹஞ் செய்து ரமித்தார் பரமசிவன்

குமாரரும் உண்டானார் அஸுராளை வதைத்த

கோலவேலருக்குச் - சோபனம் சோபனம்; (2)

தேவசேனாபதி தெய்வயானையை மணந்து

ஸ்ரீபுரந்தன்னில் வந்தார் - (சோபனம் சோபனம்) 163.

<u>ஸ்ரீலலிதாம்பிகையின் ஸ்ரீபுர வர்ணனை</u>

ஸ்ரீபுர மென்றதைக் கேட்டது மகஸ்தியர்

தவமுனி ஹயக்ரீவரைப் பார்த்து

ஸ்ரீபுரமென்பதை விஸ்தாரமாகவே

சொல்ல வேண்டும் தயவாக வென்றார்.

அன்புடன் வார்த்தையைக் கேட்டு ஹயக்ரீவர்

அகஸ்திய முனிவரைப் பார்த்துரைப்பார்

இன்பங்களுண்டாக தேவியின் நகரத்தை

இனிச்சொல்வோம் கேளென்றார் (சோபனம் சோபனம்) 164.

பண்டாஸுரனை வதைத்த ஸந்தோஷத்தால்

பரமேச்வரிக்கும் காமேசருக்கும்

தேவசேனாபதியும் தேவர்களும் கூடி

ஸ்ரீலலிதாம்பாள் கொலுவிருக்க

ஈச்வரியாளுக்குச் சிந்தாமணிக் கிருஹம்

விச்வகர்மாவை அமைக்கச் சொன்னார்

மகிழ்ந்து விச்வகர்மா இவர்கள் சொன்னபடிக்குப்

புகழ்பெறவே செய்தார் (சோபனம் சோபனம்) 165.

ஸ்ரீபுரத்தின் விவரம்

தரணியில் ஒன்பதும் சமுத்திரத்தில் ஏழும்

தேவிக்குப் பதினாறு ஸ்ரீபுரங்கள்

மேருகிரியிலொரு ஸ்ரீபுர முண்டதை

முன்னாலே உமக்கு நான் சொல்லுகிறேன்

மூவராலும் ஆதிசேஷராலும் சொல்லி

முடியாது அம்மன் புர மஹிமையை

சாவதானமாகக் கேட்கவேண்டுமிதை
தன்யனே சொல்லுவேன் (சோபனம் சோபனம்) 166.

ஒன்றாவது கோட்டை இரும்பாக்கும் அதற்கு
உயரம் நானூறு யோஜனைகள் உண்டு
நன்றாக நூறு யோஜனை அகலங்காண்
நான்கு புறத்திலும் வாசலுண்டு
வாசல்கள் தோறும் கோபுரமுண்டு அதற்கு
வரியாக தட்டுக்கள் இருபத்தஞ்சு
யோஜனைக்கு ஒரு தட்டு வீதங்கணக்கு
உச்சி மகுடம் மூன்று (சோபனம் சோபனம்) 167.

இந்த வாசல்போலே நாலு வாசலுக்கும்
இது போலே கோபுரத்தட்டு முண்டு
இந்தக்கோட்டை வாசல் கதவு கோபுரமுதல்
எல்லாம் இரும்புப்பணி இதைப்போல
எந்தக்கோட்டைகள் இனி சொல்லப் போகின்றோமோ
அந்த கோட்டை இதுபோல் அகஸ்தியா
இந்தக் கோட்டை கழிந்த புறமுள்ளது
ஏழுயோஜனையுண்டு (சோபனம் சோபனம்) 168.

ஏழுயோஜனையுள்ள நடு இடைவெளி தன்னில்

எல்லா மரங்களும் நிறைந்திருக்கும்

தோழர்களே ஏழு யோஜனையின் விஸ்தாரம்

சொல்லப் போகிறோம் கோட்டை இடைநடுவில்

காளியும் காளரும் சக்தியுடனே

கால சக்ராசனத்தில் இருந்து

லலிதையுடைய நாமம் ஜபித்து ஒன்றாங் கோட்டை

ரக்ஷிக்கிறாள் என்றும் (சோபனம் சோபனம்) 169.

வெண்கலக் கோட்டையில் வஸந்த ருதுகாவல்

வேலியும் கற்பக விருக்ஷமாகும்

தங்கச் செம்புக் கோட்டையில் வேலி ஹரிசந்தனம்

சுசியான கிரீஷ்ம ருது காவல்

ஈயக்கோட்டையின் வேலி சந்தன விருக்ஷங்கள்

எங்குஞ் சுற்றிக் காவல் வருஷ ருது

முன்னாலிரும்புக் கோட்டையின் வேலி மந்தாரை

வெளுத்த சரத் ருது காவல் (சோபனம் சோபனம்) 170.

பஞ்சலோகக் கோட்டைக்குப் பாரிஜாதம் வேலி

ஹேமந்த ருது காவல் காத தூரம்

பஞ்சப்பொன் கோட்டைக்கும் மந்திரிணி முதலான

சக்திகள் கிருஹம் சிசர ருது காவல்

பிக்ஷு-ரகத்து, சித்தர்களும் முத்திப்

பெண்டுகளுங்கூடி இருக்கின்றார்கள்

பிக்ஷூரம் கழிந்தப் புரஞ் சாரணர்

பத்மராகக் கிருஹம் (சோபனம் சோபனம்) 171.

அழகிய கந்தர்வாள் வைரக் கிரஹந்தன்னில்

அதற்குப்பின் யோகிகள் வஜ்ஜிரக் கிருஹம்

புதுநாக ரத்னமும் வைடூர்யத்தாலும்

பின் இந்திரக் கல்லாலும் உள்ள கிருஹம்

முத்துக்கள் சூழும் மரகதத்தால் கிருஹம்

மின்போல் வராகிக்கும் நாலு கிருஹம்

சுத்தமான கிருஹம் பிரம்மாவினுடையது

செம்பவழத்தாலே (சோபனம் சோபனம்) 172.

மாணிக்க மண்டபத்தில் விஷ்ணுவும் இருக்கின்றார்

மண்டபத்தின் இடையில் சிவலோகம்

பிரம்ம தேவருடைய சத்தியலோகமும்

பிரபலமான விஷ்ணுவின் உலகம்

மாயக்கோட்டை அனந்தம் வர்ணமுள்ள கோட்டை

அதற்கிடையில் சூரியனின் விமானம்

பகவான் மார்த்தாண்டர் பைரவர் இருப்பு

பக்தரே கேளின்னுஞ் (சோபனம் சோபனம்) 173.

சந்திர பிம்பத்தில் சிங்காரமாகவே
சரியாக இருபத்தஞ்சு கோட்டையும்
சுந்தரமான கோபுரங்களும் நூறுண்டு
தொகையொரு கோட்டைக்கு நான்கு வீதம்
அப்புரந் தாமரைப் புஷ்பங்களின் வனம்
ஆறு யோஜனைக்கு நிறைந்திருக்கும்
விப்ரனே அதற்குக் கிழக்காகவே யெங்கும்
சுற்றி கதம்பவனம் (சோபனம் சோபனம்) 174.

அதற்குக் கிழக்கிலே மும்மூர்த்திகளுக்கும்
அகங்கள் மூன்று பத்ம அடவியிலே
இதற்கு நடுவில் சிந்தாமணி ரத்தினத்தால்
ஈச்வரி லலிதா தேவியின் கிருஹம்
நாலுபுறம் வாசல் உண்டதற் குச்சியில்
ஞான ரத்தினத்தாலே மகுடம்
வலப்புறத்திலே மந்திரிணியின் கிருஹம்
வாராஹிக் கிடப்புறம் (சோபனம் சோபனம்) 175.

அக்கினி முடுக்கிலே அக்கினிக் குண்டம்
அதற்கு மேலே நிற்கும் ஸ்ரீசக்கரத்தேர்
நிற்கின்றது வாயு முடுக்கில் மந்திரிணி தேர்,
நேரே ஈசான்யத்தில் வாராஹிதேர்

இந்த நடுவிலே சக்திகளின் கிருஹம்

சிந்தாமணி கிருஹத்தைச் சுற்றிலும்

சிந்தாமணிக் கிருஹம் சிந்தாமணிச்சுவர்

சுற்றிலும் தீபங்கள் (சோபனம் சோபனம்) 176.

சிந்தாமணிக் கிருஹத் தின் நடு மத்தியில்

சிந்தாமணியாலே ஸ்ரீபீடம்

அஷ்டகோண வடிவாகி விளங்கிய

சக்ரராஜ வென்ற பீடத்தின்மேல்

ஐம்மூன்று தட்டடந்த ஸ்ரீபீடத்திற்கு

ஆயிரத்தறுநூறு முழம் வீதி

கைமுழத்திற் கிருபது முழ உயரம் தட்டு

கடலைக் குடித்த அகஸ்த்தியா (சோபனம் சோபனம்) 177.

தட்டுதோறும் இதுபோல் உயரம் வீதி

தட்டுதோறும் சக்திகள் இருக்காள்

திட்டமாய் ஸ்ரீபீடத்திற் கப்புறத்திலே

சிங்காரப்படி முப்பத்தாறு ஸ்தம்பம்

வட்டமான இந்த பீடத்தில் ஈசர் பிரம்மா

மாலவர் ருத்திரர் கட்டிலின் கால்

கட்டிற் பலகை சிவன் ஸதாசிவன் பாய்

ஈசானன் தலையணை (சோபனம் சோபனம்) 178.

மஞ்சத்தின் மேல் ஹம்ஸதூளிகா மெத்தையும்

வட்ட இருபுறங் தலையணையும்

மஞ்சத்தின் மேலே கிழக்கைப் பார்த்திருக்கின்றார்

மன்மத கோடி போல் காமேசரும்

நாதர் காமேசர் மடிமேல் கிழக்கைப் பார்த்து

தாய் லலிதா தேவியும் இருக்காள்

பாலா லலிதா தேவிக்கு நித்தியம்

பதினாறு வயதென்றும் (சோபனம் சோபனம்) 179.

இடது துடைமேல் சுவாமி வைத்துக் கொண்டம்மனை

வலது கன்னத்தை முத்தம் இட்டுக் கொண்டு

விடைமேல் அழகரும் வளமுடன் தேவிக்கு

விபூதி யிட்டு திருஷ்டி கழித்து

அஞ்சாதீர் எனப் பக்தர்க்கு அபயப் பிரதானஞ் செய்து

அம்பிகையுடன் தாம்பூலந் தரித்து

இந்தப்படி ஈசன் சிந்தாமணிக் கிருஹத்தில்

இருந்தார் தேவியுடன் (சோபனம் சோபனம்) 180.

தேவிக்கு உயர நாற்பது முழத்திற்கு மேல்

தேசத்தில் ஒப்பில்லா மேல்கட்டிலில்

யமுனாகை ஹாரமாகச் சுற்றி யிருக்கின்றாள்

இச் ஜகத்தை மோஹிப்பிக்கும் மாயை!

தேவியுடைய ஸௌபாக்கியத்திற் கொப்பில்லை

தேவிதானறிய வேணு  மகஸ்தியா

நாவாலும் மனதாலும் எண்ண முடியாது

ராஜேச்வரி மஹிமை (சோபனம் சோபனம்) 181.

<u>தேவியின் ஸ்ரீவித்தை ஜபத்தின் மஹிமை உரைத்தல்</u>

மந்திரங்களுக்கெல்லாம் பெரிதான ஸ்ரீவித்தை

மஹாகுருவின்  இடத்தில் வேண்டிக் கொண்டு

மந்திரத்திற்குச் சொன்ன ஜபஹோமங்கள் செய்து

மஹிமை தேவாளுக்குப் போஜனமளித்துப்

பின்னர் தேவியை பரமாத்மாவாய்த் தியானித்து

பிறகு நிஷ்காம்ய ஜபம் செய்த பேர்க்கு

எண்ணிய காரியம் கைகூடும் ஜகத்திலே

இவர்கள் எங்கும் பூஜ்யர் (சோபனம் சோபனம்) 182.

அசுத்தத்துடன் சோபனத்தைச் சொன்னபேர்க்கும்

அசங்கித்த பேர்க்கும் பிணிகளுண்டு

அசுத்தமில்லாமலும் அசங்கையில்லாமலும்

அம்மன் சோபனமென்றும் பக்தியுடன்

விச்வாஸமாய்ச் சொன்ன பேர்க்கும் கேட்டவர்க்கும்

வியாதியில்லை சத்ரு பாதையில்லை

நிஜமாய் ஜ்வரம் வியாதி ரோகாதிகளில்லை
நித்ய ஸம்பத்துண்டு (சோபனம் சோபனம்) 183.

இந்தச் சோபனம் பாடும் வாழ்வரசிகள்
எல்லாம் தேவிகளென்று மனதிலெண்ணி
சந்தனத்தாம்பூலம் குங்குமம் பழம் புஷ்பம்
ஸந்தோஷமாய் எல்லார்க்குங் கொடுத்து
எந்தெந்தக் கிருஹங்களில் சொல்லவைத்துக் கேட்பாரோ
அந்தந்தக் கிருஹங்களில் அரிஷ்டம் நீங்கும்
ஸுந்தரி கிருபையாலே ஸந்ததி விருத்திக்கும்
தீர்க்காயுஸுமுண்டு (சோபனம் சோபனம்) 184.

<u>தேவியைப் பூஜிக்க வேண்டிய முக்கிய காலங்கள்</u>

அன்பாய் நவராத்ரி பௌர்ணமி சுக்கிரவாரம்
அம்மன் சோபனந்தன்னைச் சொன்னபேர்க்குத்
துன்பங்கள் உண்டாகமாட்டாது ஒருக்காலும்
தென்திசையை அடையார் தினஞ்சொன்னவாள்
ரொம்பச் சொல்லுவானேன் தேவி தாஸாளுக்குத்
திரிலோகமும் அவர்கட்கு ஜயம்
நம்பினபேர்களைக் காத்திடத் தேவியல்லால்
நாட்டிலே வேறுண்டோ (சோபனம் சோபனம்) 185.

அத்திரி மஹரிஷி ஆசிரமத்தில் அநுசூயை

கேட்ட இக்ஞான ரஹஸ்யத்தை

நல்துறையில் வாழும் லக்ஷ்மி கடாக்ஷத்தால்

நாராயணன் உரைத்த தேவி மஹிமை

ராஜேச்வரியாள் மஹிமை யகஸ்தியரும்

ஆதரவாய்ச் சொல்லச் சொன்னதற்கு

நாடு செழிக்க அவதரித்து வந்த

மாதவர் அறிவித்தார் (சோபனம் சோபனம்) 186.

அறிந்தறியாமல் இந்தச் சோபனத்தில்

அர்த்த அக்ஷரப்பிழை இருந்தாலும்

மஹாப்பிரபு மனுஷப்பிரபு விஷ்ணு என்பது போலும்

மராமரா என்றதோர் நாமம் போலும்

வரத சிவனார் சிவ சங்கர நாமம் போலும்

வார்த்தைப் பிழைகள் தன்னைப் பொறுத்து

ஏதுவிதத்திலும் (பர) தேவியைத் தியானித்தால்

ஏழைக்கிரங்குவாள் (சோபனம் சோபனம்) 187.

<u>மங்கள வாழ்த்து</u>

ஜயமங்களம் லலிதாதேவிக்கும்

ஜயமங்களம் காமேச்வருக்கும்

ஜயமங்களம் மந்திரிணி தண்ட நாதைக்கும்

ஜயமங்களம் ஸர்வசக்திகட்கும்

ஜயமங்களம் ஹயக்ரீவருக்கும்

ஜயமங்களம் அகஸ்தியமா முனிக்கும்

ஜயமங்களம் ஸர்வஜனங்கட்கும் நமக்கும்

ஜயமங்களம் நித்ய சுபமங்களம் ! 188.

லலிதாம்பாள் சோபனம் முற்றுப்பெற்றது